Registered as a NewsPaper

விலை ரூபா 7.00

# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

பக்கங்கள் -08

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | ஐப்பசி -08 | 25-10-2003 | சனிக்கிழமை | ஓசை 249




**பல்வேறு பகுதிகளிலிருந்து ஆதரவாளர்களைத்திரட்டியபோதும்**

# சு.க. நடத்திய அரசாங்க எதிர்ப்புப் பேரணியில் எதிர்பார்த்த அளவு மக்கள் பங்கேற்கவில்லை

## பொதுக் கூட்டத்திற்கு சந்திரிகா சமுகமளிக்கவில்லை

(கொழும்பு)

**அரசாங்கத்தின் சமாதான முயற்சிகளுக்கு எதிராகவும் சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கு மக்கள் மத்தியிலுள்ள செல்வாக்கை வெளிப் படுத்தவுமென சிறிலங்கா சுதந்திரக் கட்சியால் ஒழுங்கு செய்யப்பட்ட பேரணியில் அக்கட்சி எதிர்பார்த்த அளவிற்கு மக்கள் திரளவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. 10 இலட்சம் பேரைத் திரட்டுவது என்ற குறிக்கோளுடன் நடத்தப்பட்ட பேரணியில் ஒரு இலட்சம் வரையான மக்களே பங்குபற்றினர் என சுயாதீனத் தகவல்கள் கூறுகின்றன. இறுதியில் நடைபெற்ற கூட்டத்தில் சனாதிபதி சந்திரிகா கலந்து கொள்வதாக அறிவிக்கப்பட்ட போதும் அவர் கலந்துகொள்ளவில்லை.**

ஐந்து இடங்களிலிருந்து ஊர்வலங்கள் புறப்பட்டன. சுகதாச விளையாட்டரங்கு,சந்திரிகா சில்வா விளையாட்டரங்கு, ஹென்றி பீரிஸ் விளையாட்டரங்கு, ஹம்பெல் பூங்கா, பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபம் ஆகிய இடங்களிலிருந்து பகல் ஒரு மணியளவில் ஊர்வலங்கள் புறப்பட்டன.

எதிர்க்கட்சித் தலைவர் மகிந்தராஜபக்ச, பாராளுமன்ற உறுப்பினர்களான அனுராபண்டாரநாயக்க, மங்கள சமரவீர மற்றும் முக்கிய உறுப்பினர்கள் இதில் கலந்து

(8 ஆம் பக்கம் பார்க்க)



கொழும்பில் நடைபெற்ற அரச எதிர்ப்புப்பேரணி

# தற்போதைய சமாதான முயற்சிகளில் உள்ள அபாய நிலையை சுட்டிக் காட்டுவது என் கடமை

## சனாதிபதி சந்திரிகாவின் உரையில் தெரிவிப்பு

அரசாங்கம் தற்போது எடுத்து வரும் தற்போதைய சமாதான முயற்சிகளில் காணப்படும் அபாய நிலைமைகள் தொடர்பாக சுட்டிக்காட்டுவது எமது கடமையாகும் என நேற்று கொழும்பு மாநகரசபை வளாகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் வாசிக்கப்பட்ட சனாதிபதியின் உரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவரது உரையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, சகல இன மக்களும் முரண்பாடின்றி வாழ்வதற்கு அதிகாரப்பகிர்வு அவசி

(8 ஆம் பக்கம் பார்க்க)

# கிண்ணியாவில் நேற்று மீண்டும் ஊரடங்கு

கிண்ணியாவில் நேற்று பிற்பகல் இரண்டு மணியிலிருந்து ஊரடங்குச் சட்டம் இரண்டாவது நாளாக அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது. இன்று சனிக்கிழமை காலை 6 மணிக்கு ஊரடங்குச்சட்டம் நீக்கப்படும் என்று பொலிசார் தெரிவித்தனர். இதேவேளை-வியாழக்கிழமை தாக்குதலுக்கு உள்ளாகிய மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களின் வீடுகளும் அமைந்துள்ள வீதியில் கூடுதலான படையினர் மற்றும் பொலிசார் காவல் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று பொலிசார் தெரிவித்தனர். வியாழக்கிழமை பிற்பகல் முஸ்லிம்குழு ஒன்று நடத்திய தாக்குதலில் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சின்னமஹ்ரூபின் வீடு பலத்த சேதத்திற்குள்ளாகியதாகப் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. இத்தாக்குதல் சம்பவம் குறித்து பூரணவிசாரணை நடத்தும்படி உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க உத்தரவிட்டுள்ளார். விசேட பொலிஸ் குழு ஒன்று விசாரணை நடத்தப் பணிக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸ் வட்டாரங்கள் கூறின. (25)

**- கண்காணிப்புக்குழுத் தலைவர் விவகாரம் -**

# சந்திரிகா எழுதிய கடிதத்திற்கு நோர்வேயின் பதில் இன்று?

(கொழும்பு)

இலங்கைப் போர்நிறுத்த கண்காணிப்புக்குழுத் தலைவரை பதவி நீக்குமாறு கோரி சனாதிபதி சந்திரிகா நோர்வே பிரதமருக்கு அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்திற்கான பதில்க் கடிதம் இன்று நோர்வேயினால் அனுப்பிவைக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை மேற்படி விடயம் தொடர்பாக விசாரணைகளை சிறிலங்காப் பாதுகாப்பு அமைச்சர் மேற்கொண்டுவருவதாகவும் அவ் விசாரணை அறிக்கையை அமைச்சரவைக்கு சமர்ப்பித்த பின்னர் தான் அரசு இது தொடர்பான முடிவை எடுக்கும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (32)

# மாட்டுவண்டி கடத்தப்பட்டதற்கும் எமக்கும் எதுவித தொடர்புமில்லை

## திருமலை அரசியல்துறைப் பொறுப்பாளர் திலக்

(திருகோணமலை)

கிண்ணியாவில் இடம்பெற்றதாகக் கூறப்படும்மாட்டு வண்டி கடத்தப்பட்ட சம்பவத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் எதுவித தொடர்பும் இல்லை என்று விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் திலக் நேற்றுத் தெரிவித்தார். தற்போதைய சமாதான முயற்சியை தடம்புரளச் செய்யும் முயற்சியில் ஈடுபட்டுள்ள தீய சக்திகளின் வேலையே இது என்றும் அரசியல்துறைப் பொறுப்பாளர் திலக் மேலும் தெரிவித்தார். கடந்த வாரம் தம்பலகாமம்-கிண்ணியா வீதியில் வைத்து மரம் ஏற்றிச் சென்ற மாட்டு வண்டி ஒன்றை இனந்தெரியாத சிலர் கடத்திச் சென்றதை அடுத்து, கிண்ணியாவில் ஒரு குழுவினரால் வியாழக்கிழமை ஹர்த்தால் ஒன்று நடத்தப்பட்டது. விடுதலைப்புலிகள் தான் மாட்டு வண்டியைக் கடத்தினார்கள் என்றும் முஸ்லிம் குழுவினர் குற்றஞ்சாட்டியிருந்த மாட்டு வண்டி கடத்தலுக்கும் தமக்கும் எதுவித, தொடர்புமில்லையென்று விடுதலைப்புலிகள் மறுத்துள்ளனர். (25)

# முனைப்பகுதி சம்பவம் குறித்து தேடப்பட்ட இளைஞன் கைது

பருத்தித்துறை முனைப் பகுதியில் இடம்பெற்ற அசம்பாவிதங்களையடுத்துப் பொலிசாரால் தேடப்பட்டு வந்த மீனவரான பீற்றர் மாறன் (வயது-23) நேற்றுக் காலை பருத்தித்துறைப் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட குறித்த மீனவ இளைஞன் பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்குள்

(8 ஆம் பக்கம் பார்க்க)

**- அமைச்சரின் அழைப்பில் வந்த -**

# தென்னிந்திய கலைஞருக்கு படையினர் அவமரியாதை

இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சின் ஏற்பாட்டில் நேற்று யாழ்.இல் கொண்டாடப்பட்ட தேசிய தீபாவளி விழாவிற்கு வருகை தந்த வயலின் மேதை குன்னக்குடி வைத்தியநாதன் குழுவினர் பலாலியில் கௌரவக் குறைவாக நடத்தப்பட்டதாக இசை ஆர்வலர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

விமானமூலம் பலாலி விமானப் படைத் தளத்தை அடைந்த குழுவி

(8 ஆம் பக்கம் பார்க்க)

# சிங்கள மேலாதிக்கத்தை தமிழர்மீது திணிக்கவே, இந்திய-சிறிலங்காப் பாதுகாப்பு ஒப்பந்தம்

## - தமிழ் கார்டியன் பத்திரிகை கண்டனம்

(லண்டன்)

சிங்கள மேலாதிக்கத்தை விடுதலைப்புலிகள் மற்றும் தமிழ் மக்கள் மீது பலாத்காரமாகத் திணிப்பதற்கு சிறிலங்கா அரசாங்கம் இந்தியாவுடன் பாதுகாப்பு ஒப்பந்தத்தை மேற்கொண்டிருப்பதாக தமிழ் கார்டியன் பத்திரிகை தெரிவித்துள்ளது. லண்டனிலிருந்து வெளிவரும் இப்பத்திரிகையில் விடுதலைப்புலிகள் மீது ஒரு படைத்தரப்பு அச்சுறுத்தலை மேற்கொள்ள சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முயல்வதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இந்த ஒப்பந்தம் இலங்கையின் சமாதான முயற்சிகளை ஆரோக்கியமாக எடுத்துச் செல்வதற்குப் பாதகமாக அமைகிறது என்றும் அப்பத்திரிகை கவலை தெரிவித்திருக்கிறது. இதே வேளை சிறிலங்கா அரசு விடுதலைப்புலிகளுக்கெதிராக இந்தியாவுடன் பாதுகாப்பு ஒப்பந்தத்தை மேற்கொள்ளவில்லையென அமைச்சர் ஜீஎல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

## - விடுதலை பெறும் எம்மண்ணை அபிவிருத்தி செய்யக்கூடிய -

# அறிவியலாளர்களாக, ஆளுமையுள்ளவர்களாக மக்கள் வளரவேண்டுமென்பதே தலைவரது எதிர்பார்ப்பு

### கணினிப் பயிற்சி நிலைய திறப்புவிழாவில் கேணல் பானு

(அலுவலக செய்தியாளர்)

எங்களது மண்விடுதலை பெறும் போது அதனைக் கட்டியெழுப்பி அபிவிருத்திப் பாதையில் கொண்டு செல்லக்கூடியவகையில் எமது மக்கள் புத்திஜீவிகளாகவும் அறிவியலாளராகவும் ஆளுமைமிக்கவர்களாகவும் வளரவேண்டும் என்பதே எமது தலைவரது எதிர்பார்ப்பு என நேற்று வட்டக்கச்சி இராமநாதபுரம் மகாவித்தியாலயத்தில் தமிழீழ மாணவர் அமைப்பால் அமைக்கப்பட்ட கிராமிய தகவல் தொழில்நுட்ப நிலையத்தைத் திறந்து வைத்து சிறப்புரையாற்றுகையில் தளபதி கேணல் பானு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், எமதுதலைவரின்இத்தகைய நிலைப்பாடு காரணமாகவே காலத்தின் தேவை கருதிபல்வேறு துறைகளை அமைத்து எமது மக்களின் பல்வேறு விடயங்களிலும் மிகுந்த அக்கறை எடுத்து அவர்களின் தேவைகளை நிவர்த்தி செய்யக்கூடியவகையில் வேலைத்திட்டங்களை முன்னெடுத்துவருகிறார்.

எனவே மாணவர்களாகிய நீங்கள் இவ்வாறு நிறுவப்படுகின்ற கணினி கல்வி நிலையங்களூடாக உங்களது அறிவை வளர்த்துக்கொள்ள வேண்டும். ஏனெனில் எமது சமூகம் பல ஒடுக்கு முறைகளைச் சந்தித்துள்ளது. பல அழிவுகளை சந்தித்துள்ளது. எம்மீது மேற்கொள்ளப்பட்ட யுத்தத்தால் தகவல்தொழில்நுட்ப அறிவை இழந்திருக்கிறார்கள். அவ்வாறு அவர்கள் இழந்து நிற்கின்றவற்றை தற்போது ஏற்பட்டுள்ள சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி நிறைவு செய்து கொள்ளவேண்டும். இதற்காக நீங்கள் ஆடம்பர உலகை தூக்கிஎறிந்துவிட்டு அறிவியல் உலகினுள் புகுந்து கொள்ள வேண்டும்.

இன்று உலகம் கணினிமயமாக மாறிக்கொண்டிருக்கிறது. அங்கு தட்டச்சு இயந்திரங்களையே காண முடியாது. அந்தளவுக்கு கணினி இயந்திரங்கள் உலகை ஆக்கிரமித்து நிற்கின்றன. எனவே எமது மக்களாகிய நீங்கள் வெறுமனே பொருள் சேர்ப்பதுடன் நின்று விடாது கணினிகளை வீட்டுக்கு வீடு சேர்த்துக்கொள்ளுங்கள். அவ்வாறு சேர்த்துக்கொள்வதன்மூலம் அவற்றைப் பற்றிய முழுமையான அறிவைப்பெற்று உலக அறிவியலுடன் போட்டி போட்டு சமநிலையை அடையமுடியும். அத்துடன் நீங்கள் இத்தகைய கணினிநிலையங்களில் பெறுகின்ற கணினி அறிவைத் தொடர்ந்தும் தக்கவைக்கமுடியும். கணினிக் கல்வியை எவரும் எளிதாக நினைத்துக் கற்கக்கூடாது. அவ்வாறு கற்கவும் முடியாது. எனவே நாம் எமது தேசத்தின் எதிர்காலத்தைக்கருத்திற் கொண்டு



கணினிக்கல்வியை சீரான முறையிலும் பக்குவநிலையுடனும் கற்று உலக நாடுகளுடன் சமமாக நாமும் தலைநிமிர்ந்து நிற்க வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

தேசியக்கொடி ஏற்றலுடன் ஆரம்பமான இந்நிகழ்வில் கணினிப்பயிற்சி நிலைய பெயர்ப்பலகையை தளபதி சசிக்குமார் திறந்து வைத்தார். மண்டபத்தை தளபதி கேணல் பானு நாடாவை வெட்டித் திறந்து வைத்தார். தொடர்ந்து சிறப்புரைகள் இடம் பெற்றன. (லோ)

## உதைபந்தாட்ட பயிற்சிமுகாம்

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தினால் நடாத்தப்படும் உதைபந்தாட்ட பயிற்சி முகாம் ஒன்று இன்று காலை கிளி. மத்திய விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாகின்றது. இரண்டு நாட்கள் நடைபெறவுள்ள மேற்படிபயிற்சிமுகாமில் கிளிநொச்சி மாவட்டத்தின் நான்கு பிரதேச சபைகளில் இருந்தும் சுமார் ஐம்பது வீரர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

## மனிதவள உரிமை புதிர்ப்போட்டியில் வித்தியானந்தாக்கல்லூரி முதலிடம்

மனித வள அபிவிருத்தி உரிமைகள் அமைச்சினால் நடாத்தப்பட்ட மனிதவள உரிமைகள் தொடர்பான புதிர்ப் போட்டியில் முள்ளியவளை வித்தியானந்தக் கல்லூரி முதலாம் இடம் பெற்றுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத் திற்குட்பட்ட பாடசாலைகளின் உயர்தர மாணவர்களுக்கிடையிலான மேற்படி போட்டியில் முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி முதலாம் இடம் பெற்று மாவட்ட மட்டப் போட்டியில் கலந்து கொண்டும் மாவட்ட மட்டப்போட்டியிலும் முதலாம் இடமாக தெரிவாகி மாகாண மட்ட போட்டிக்கு தெரிவாகியுள்ளது. மேற்படி போட்டியில் வித்தியானந்தாக் கல்லூரியைச் சேர்ந்த உயர்தர மாணவர்களான அ.கதீசன், பி.கௌசிகன், பா. மஞ்சுதன், நா. பிரசாந்தன் ஆகியோரே கலந்து கொண்டு அதிகூடிய புள்ளிகளைப் பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஆ)

## 8 சுகாதார பரிசோதகர்களுக்கு உந்துருளிகள் வழங்கல்

முல்லை மாவட்டத்தில் 8 பொது சுகாதார பிரிசோதகர்களுக்கு உந்துருளிகள் வழங்கப்பட்டன.

யுனிசெவ் நிறுவனத்தின் நிதி உதவியில் பொது சுகாதார பரிசோதகர்களின் வேலைகள் தற்போது அதிகரித்துக் காணப்படுவதால் இவ் உந்துருளி வழங்கியதினால் இலகுவாக வேலைகளைச் செய்யமுடியும் என பொது சுகாதார பரிசோதகர்கள் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (20)

## இந்தியாவுடனான ஒப்பந்தம் குறித்து அரசாங்கம் விளக்க வேண்டும்

### ஜே.வி.பி. பா.உ. விமல் வீரவன்ச

இந்திய அரசாங்கத்துடனான ஒப்பந்தம் பற்றி தெளிவான விளக்கத்தை அளிக்கும்படி அரசாங்கத்தை ஜே.வி.பி. பாராளுமன்ற உறுப்பினர் விமல்வீரவன்ச கேட்டுள்ளார். இது பற்றி எதிர்கட்சியுடன் விவாதிக்க வேண்டுமெனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

இதேவேளை, கூட்டு ஒப்பந்தம் பற்றி விளக்கமளிக்க தேவையில்லை என வெளிநாட்டமைச்சர் டிரோன் பெர்னாண்டோ கூறியுள்ளார். ஆனால், எந்நேரத்திலும் இது பற்றி விவாதிக்க அரசாங்கம் தயார் எனவும் அவர் கூறினார்.

## இந்திய தென்பிராந்திய இராணுவத் தளபதி ஒஸ்ரின் பெர்னாண்டோவுடன் சந்திப்பு

சிறிலங்காவுக்கு விஜயம் செய்துள்ள இந்திய தென்பிராந்தியக் கட்டளைத் தளபதி லெப். ஜெனரல் சிகோடா சிறிலங்காவின் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோவை பாதுகாப்பு அமைச்சு அலுவலகத்தில் கடந்த புதனன்று சந்தித்துப் பேசியுள்ளார்.

இரு நாடுகளுக்கிடையிலான பாதுகாப்பு சம்பந்தமான அக்கறைக்குரிய விடயங்கள் பற்றி கலந்துரையாடியதாக அமைச்சின் பேச்சாளர் தெரிவித்தார். இச்சந்திப்பில் இராணுவத் தளபதி ஜெனரல் பலகல்லவும் பங்குபற்றினார். பிரதமமந்திரி ரணில் விக்கிரமசிங்க இந்திய விஜயத்தின்போது அந்நாட்டுத் தலைவர்களுடன் இரு நாடுகளுக்கிடையிலான பாதுகாப்பு சம்பந்தமாக கலந்துரையாடியது தெரிந்ததே.

## யாழ். விளையாட்டுக் கழகங்களை மேம்படுத்த நடவடிக்கை

யாழ். மாவட்ட விளையாட்டு வீரர்கள் மற்றும் விளையாட்டுக் கழகங்களின் மேம்பாடு குறித்த நடவடிக்கைகளில் தமிழீழ விளையாட்டுத்துறை ஈடுபட்டுள்ளது.

1995 ஆம் ஆண்டிற்குப் பின்னால் யாழ்.குடாநாட்டை இராணுவம் ஆக்கிரமித்ததைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்திலிருந்த சகல விளையாட்டுக்கழகங்களும் ஒவ்வொன்றும் ஒவ்வொரு நோக்கத்துடன் இயங்கி வந்தமையால் இதுவரை காலமும் ஒவ்வொருகழகங்களுக்குமிடையே பிணக்குகள் காணப்பட்டு வந்தன. இதனைத் தொடர்ந்து இக்கழகங்கள் மற்றும் வீரர்களுக்கிடையேயான ஒற்றுமை பேணுவதுடன், விளையாட்டுகள் தவிர்ந்த ஏனைய சமூக சேவைகளிலும் ஈடுபடக்கூடியவாறு இவ்விளையாட்டுக் கழகங்கள், விளையாட்டு வீரர்களுக்குமிடையிலான நெறிப்படுத்தல்களைத் தமிழீழ விளையாட்டுத்துறை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (35)

## முல்லைத்தீவு ம.வி.க்கு தளபாடம் வழங்கப்பட்டது

நெக்கோட் நிறுவனத்தினரால் முல்லைத்தீவு மகாவித்தியாலயத்திற்கு மாணவர்களுக்கான தளபாடம் வழங்கப்பட்டுள்ளது.

இதில் 50 மாணவர் மேசை, 50 மாணவர் கதிரை என்பன வழங்கப்பட்டுள்ளதாகவும் இத்தளபாடத்தினால் அப் பாடசாலையில் நிலவிய தளபாடப்பற்றாக்குறை ஓரளவு நீங்கி உள்ளதாக முல்லை மகாவித்தியாலய அதிபர் திரு. ம.அன்ரனி ஜெகநாதன் தெரிவித்தார். (20)

## வன்னி அரச, திணைக்கள வெற்றிடங்களுக்கு பிற மாவட்டத்தவரைக் கொண்டு நிரப்பல்

### சிறிலங்காப் பிரதமருக்கு செல்வம் அடைக்கலநாதன் கடிதம்

வன்னி மாவட்ட அரச திணைக்களங்கள் வங்கிகளுக்கான வெற்றிடங்களை வேறு மாவட்டத்தவரைக் கொண்டு நிரப்புவது குறித்து சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

மேற்படி விடயம் தொடர்பாக வன்னித் தேர்தல் தொகுதியின் மிகவும் பின்தங்கிய இளைஞர்கள் பலரினால் எனது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டவற்றைத் தங்கள் மேலான கவனத்திற்குக் கொண்டு வரவிரும்புகின்றேன்.

நடுவனரச திணைக்களங்களுக்கு எழுதுநர் பரீட்சை போன்ற ஒரு சிலவற்றிற்கு மாவட்ட மட்டத்தில் வெட்டுப்புள்ளி கணிக்கப்பட்டு ஆட்சேர்ப்பு நடைபெறுகிறது. ஆனால், பலவற்றிற்கு நேர்முகப் பரீட்சைகள் நடாத்தப்படுகின்றன. சிலவற்றிற்கு எவ்வித அறிவித்தலுமின்றி நியமனங்கள் நடைபெறுகின்றன. அரசியல் செல்வாக்குப் பெற்று, பல முன்னேறிய மாவட்ட இளைஞர்கள் பின்தங்கிய வன்னி மாவட்டத் தில் வேலை வாய்ப்புப் பெறு கின்றனர். இதே நேரத்தில் பட்டம் பெற்ற, க.பொ.த. உயர்தரம் படித்த அனேக வன்னி மாவட்ட இளைஞர்கள் இவர்களைப் பார்த்து பொருமிக் கொண்டிருக்கின்றனர்.

வன்னி மாவட்ட வங்கிகளில் உள்ள வெற்றிடங்கள், வன்னி மாவட்டத்தில் பட்டம்பெற்ற க.பொ.த. உயர்தரப் பரீட்சை முடித்த பலர் காத்திருக்க, அரசியல் செல்வாக்கு பாவிக்கப்பட்டு வேறு மாவட்டங்களைச் சேர்ந்த இளைஞர்களைக் கொண்டு நிரப்பப்படுவதைத் தங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகின்றேன். இவ்வருட முற்பகுதியில் மன்னார் தேசிய சேமிப்பு வங்கியில் இருந்த வெற்றிடங்கள் இம்மாவட்ட இளைஞர்களைக் கொண்டு நிரப்பும்படி வங்கித் தலைவரிடம் கோரி இருந்தேன். அரசியல் செல்வாக்குப் பாவித்து வேறு மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு புரட்டாதி மாதத்தில் நியமனம் வழங்கப்பட்டிருப்பதை அறிந்து கவலையடைகிறேன்.

இது இவ்வாறிருக்க மாகாண மட்டத் திணைக்கள வெற்றிடங்கள் நிரப்ப பரீட்சைகள் நடாத்தப்பட்டு, பலவிதத்திலும் முன்னேறிய மாவட்ட பரீட்சாத்திகளே வேலை வாய்ப்புப் பெறும் வகையில் மாகாண மட்ட வெட்டுப்புள்ளி கணிக்கப்பட்டு, பின்தங்கிய வன்னி மாவட்ட இளைஞர்கள் முன்னேறிய மாவட்ட இளைஞர்களுடன் போட்டி இட முடியாத நிலை உருவாக்கப்பட்டு, வேலை வாய்ப்பைப் பெற முடியாத நிலை உருவாக்கப்படுகிறது.

பல வகையிலும் பின் தங்கிய வன்னி மாவட்டம் முன்னேறிய மாவட்டங்களின் தரத்திற்கு உயர்த்தப்பட வேண்டுமானால் வன்னி மாவட்ட அரச திணைக்கள வெற்றிடங்கள் இம்மாவட்ட இளைஞர்களைக் கொண்டே நிரப்பப்படும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

பல்கலைக்கழகங்கள், கல்வியற் கல்லூரிகளில் தற்போது நடைமுறையில் இருக்கும் பின்தங்கிய மாவட்டங்களிலிருந்து மாணவர்களை ஆட்சேர்க்கும் முறை, தாதியர் பயிற்சிக் கல்லூரி, தொழில்நுட்பக் கல்லூரி போன்றவற்றிலும் கடைப்பிடிப்பதன் மூலம் பின்தங்கிய மாவட்டங்கள் முன்னணிக்கு வர நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (32)


## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

சமுதாய முன்னேற்ற நிலையத்தினரால் நலிவுற்றோர் நலவாழ்வுத் திட்டத்திற்காக 24-10-2003 இல் நடாத்தப்பட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பில் பரிசுபெறும் இலக்கங்கள்.

* 01 ம் பரிசு :- 5063 (25000/= ரூபா ரொக்கப்பணம்)
* 02 ம் பரிசு :- 23994 (15000/= ரூபா ரொக்கப்பணம்)
* 03 ம் பரிசு :- 29764 (10000/= ரூபா ரொக்கப்பணம்)
* 10 ஆறுதல் பரிசுகள் (ஒவ்வொன்றும் 1000/= ரூபா ரொக்கப்பணம்)

01) 11249
02) 780
03) 5329
04) 2365
05) 15230
06) 8869
07) 15822
08) 11379
09) 25281
10) 6446

**முக்கிய குறிப்பு :-**

*பரிசுக்குரியவர்கள் 24-12-2003 ற்கு முன்பாகப் பரிசுகளைப் பெற்றுக்கொள்ளவும். குறிப்பிட்ட திகதியின் பின்னர் பரிசுகள் வழங்கப்படமாட்டாது.*

**சமுதாய முன்னேற்ற நிலையம்,**
**தலைமைச் செயலகம்,**
**ஜெயந்திநகர்,**
**கிளிநொச்சி.**

(சி-8675)

# மேற்குக் கரைப்பகுதியில் யூதக் குடியேற்றம்; மீண்டும் இஸ்ரேல் அரசு நடவடிக்கை

## அமெரிக்க சமாதான முயற்சியை மீறும் செயல்

இஸ்ரேல் மேற்குக்கரைப் பகுதியில் மீண்டும் யூதக் குடியேற்றம் ஒன்றை அமைப்பதற்கு ஏற்பாடு செய்துவருகிறது.

புதிய யூதக் குடியேற்றத் திட்டத்தின் கீழ் நூற்றுக் கணக்கான புதிய வீடுகளை அமைக்க இஸ்ரேல் திட்டமிட்டுள்ளது. இதன் முதற்கட்டமாக இவ்வீடுகளை அமைக்க இஸ்ரேல் கேள்விப்பத்திரங்களைக் கோரியுள்ளது. இதன் மூலம் இஸ்ரேல் இம் மாதத்தில் இரண்டாவது முறையாக அமெரிக்காவின் சமாதானத் திட்டத்தை மீறியுள்ளதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது. தற்போது 324 வீடுகளை அமைக்க கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டுள்ளதுடன் ஏற்கனவே கடந்த 3 வாரங்களுக்கு முன்னர் 600 வீடுகளை அமைக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக கூறப்படுகிறது.



மூன்று கமாஸ் இயக்க உறுப்பினர்கள் காயமடையக்காரணமாக இருந்த கார்க் குண்டு வெடிப்பில் சேதமடைந்த காரை பலஸ் தீனப் பொலிசார் ஒருவர் சோதனையிடுகின்றார்.

# பலஸ்தீன துப்பாக்கிதாரியின்சூட்டிற்கு மூன்று யூதக் குடியேற்றவாசிகள் பலி

பலஸ்தீன துப்பாக்கி நபர் ஒருவர் காஸா பகுதியில் நேற்றுக்காலை யூதக் குடியேற்ற வீடுகள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதில் 03 இஸ்ரேலியர்கள் உயிரிழந்துள்ளதுடன் பலர் காயமடைந்துள்ளதாக இஸ்ரேலிய பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மத்திய காஸாப் பகுதியில் நெஸ்கொரின் யூத குடியேற்றத் திட்டப் பகுதிக்கு ஊடுருவி துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட இவரை இஸ்ரேலியர்கள் தேடும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். காஸாப் பகுதியில் இவ்வாரத்தில் இஸ்ரேல் தொடர்ச்சியான வான் தாக்குதல்களை நடத்தியதைத் தொடர்ந்து நேற்று இச் சம்பவம் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இச்சம்பவம் முடிந்து விடவில்லையென இஸ்ரேலியப் பாதுகாப்பு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

# எல்லைப் பிரச்சினையைத் தீர்க்க சீனா–இந்தியா பேச்சுவார்த்தை


இந்தியாவும் சீனாவும் எல்லைப்பிரச்சினைகளைத் தீர்ப்பது தொடர்பாக இரண்டு சுற்றுப் பேச்சுவார்த்தைகளை நேற்றுமுன்தினம் நடத்தியுள்ளன. அரசியல் மட்டத்தில் இந்தியாவும் சீனாவும் இந்த இரண்டு சுற்றுப் பேச்சுக்களை நடத்தியுள்ளன.

07 பேர் கொண்ட சீனக் குழுவினருக்கு மூத்த வெளியுறவுத் துறையமைச்சர் ஹாய் பூங்குவோ தலைமை வகித்துள்ளார். இந்தியத் தரப்பில் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் பிரவேஸ் மித்ரா தலைமை தாங்கியுள்ளார்.

நேற்றுமுன்தினம் இருதரப்பும் அரசியல் மட்டத்தில் நடத்திய பேச்சுக்கள் குறித்து அதிகார பூர்வமான செய்திகள் எதுவும் வெளியிடப்படவிலிலை.

எனினும் மூன்றாவது சுற்றுப் பேச்சுக்களின் பின்னரே பேச்சுவார்த்தை விபரங்கள் தெரிவிக்கப்படலாம் என்றும் கூறப்படுகிறது. அதேநேரம் சீனாவின் வெளியுறவு அமைச்சர் பிரதமர் வாஜ்பாய் வெளியுறவு அமைச்சரையும் விரைவில் சந்திக்கவுள்ளார்.

அத்துடன் கடந்த யூன் மாதம் பிரதமர் வாஜ்பாய் சீனப் பயணம் மேற்கொண்ட போது பேச்சுக்களை நடத்த ஏற்பாடுகளை செய்யப்பட்டன.



மெக்சிக்கோவில் கட்டட வேலை நடைபெற்றுக் கொண்டிருந்த வேளை மின் ஒட்டுவேலையின் போது தீப்பிடித்துக் கொண்ட கட்டடத்தில் மீட்பு வேலையில் தீயணைப்புப் பணியாளர்கள்.

-ஈராக்கிற்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டை -

# ஸ்பெயினில் நடத்தும் முயற்சிக்கு எதிராக மக்கள் ஆர்ப்பாட்டம்

ஈராக்கை மீளக் கட்டியெழுப்புவதற்கு நடைபெறும் உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டை மெற்றிக் நகரில் நடத்துவதற்கு எதிர்ப்புத்தெரிவித்து பல்லாயிரக்கணக்கான ஸ்பெயின் மக்கள் நேற்று முன்தினம் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதாக ராய்ட்டர் செய்தி கூறுகின்றது.

புஷ்சின் பறிமுதல் நடவடிக்கைக்குத் தாம் பரிகாரம் தேடப் போவதில்லையென ஆர்ப்பாட்டக்காரர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். வயதெல்லை இன்றி பலரும் இவ் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டுள்ளனர். அத்துடன் சுலோக அட்டைகளை ஏந்திய வண்ணம் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் இவர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# ரஷ்ய சுரங்கத் தொழிலாளர் வெள்ளத்தில் சிக்கிக் கொண்டனர்

ரஷ்யாவின் 46 சுரங்கத் தொழிலாளர் சுரங்கப்பகுதியில் ஏற்பட்டுள்ள வெள்ளத்தில் சிக்கியுள்ளதாகக் கூறப்படுகிறது.

ரஷ்யாவின் தெற்குப்பகுதியில் 800 மீற்றர் ஆழத்திலுள்ள சுரங்கப்பகுதி ஒன்றிலேயே இவர்கள் சிக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# எல்லை கடந்த பயங்கரவாத ஒழிப்பு; இந்தியாவிற்கு பல்கேரியா ஆதரவு!

எல்லை கடந்த பயங்கரவாதம் உட்பட பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளில் இந்தியாவின் நிலைப்பாட்டிற்கு பல்கேரியா ஆதரவு தெரிவித்துள்ளது.

பயங்கரவாதம், போதைப் பொருள் கடத்தல், திட்டமிட்ட குற்றங்கள் ஆகியவற்றிற்கு எதிரான இந்தியாவின் நவடிக்கைகளில் பல்கேரியாவும் சேர்ந்து ஒத்துழைப்பு வழங்கவுள்ளதாக பல்கேரிய சனாதிபதி கர்வானோ கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் இந்திய சனாதிபதி அப்துல் கலாமுக்கு அளிக்கப்பட்ட விருந்துபசாரத்தின் போதே பல்கேரிய சனாதிபதி இவ்வாறான உறுதிமொழியை அப்துல் கலாமுக்கு வழங்கியுள்ளார்.

பயங்கரவாதத்தை ஒழிக்க சர்வதேச சமூகம் ஒன்றிணைந்து புத்துணர்வுடன் செயற்படும் என டாக்டர் அப்துல் கலாம் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இரு நாடுகளும் வெளியிட்டுள்ள கூட்டறிக்கையில் பயங்கரவாதத்தை எவ்விதத்திலும் நியாயப்படுத்திட முடியாது என்று கூறப்பட்டுள்ளது.

அத்துடன் எல்லைகடந்த பயங்கரவாதத்தை எதிர்க்க ஐ.நா. சபையின் பங்களிப்பை வலுப்படுத்த வேண்டுமென்றும் அக் கூட்டறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

மேலும் ஐ.நா. சபையில் இந்தியாவுக்கு நிரந்தர உறுப்பு நாடாக அங்கீகரிக்கப்படவும் பல்கேரியா ஆதரவு தெரிவித்துள்ளது. இதேவேளை இரு தரப்பு உறவுகளை இயல்பாக்கிட இந்தியா அறிவித்துள்ள பல்வேறு முன்முயற்சிகள் தொடர்பாக முறைப்படியான பதிலளிப்பதற்கு முன்னர் பாகிஸ்தான் பல்வேறு அரசுத் துறைகளுடன் ஆலோசனைகளை நடத்தி வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

உள்துறை, போக்குவரத்துத்துறை, மின்வளத்துறை, வெளியுறவு ஆகிய அமைச்சக்களுடன் பாகிஸ்தான் ஆலோசனைகளில் ஈடுபட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அமெரிக்க சனாதிபதி புஷ்சின் ஆசியச் சுற்றுப்பயணம் முடிவு

அமெரிக்க சனாதிபதி புஷ் ஐந்து ஆசிய நாடுகளுக்கு மேற்கொண்ட சுற்றுப்பயணத்தை முடித்துள்ளார். டோக்கியோவின் பிரதமரைச்சந்தித்து பேச்சு வார்த்தை நடத்திய புஷ் பிரதம மந்திரி அளித்த இராப் போஷன விருந்திலும் கலந்து கொண்டுள்ளார்.

மணிலாவில் 08 மணித்தியாலங்கள் அவர் தங்கியிருந்த வேளை பாதுகாப்பு நடவடிக்கைகள், பயங்கரவாதத்திற்கு எதிரான முயற்சிகள் என்பன பற்றி ஆராயப்பட்டுள்ளன. ஆசிய பசுபிக் நாடுகளின தலைவர்களின் மாநாட்டில் கலந்து கொள்ளவென பாங்கொங் சென்ற அவர் இரண்டு நாட்கள் அங்கு தங்கியிருந்து முக்கிய தலைவர்களைச் சந்தித்து உரையாடியுள்ளார். அத்துடன் சிங்கப்பூரில் பிரதம மந்திரியைச் சந்தித்து கலந்துரையாடியமையைத் தொடர்ந்து ஈராக்கின் புனரமைப்பிற்கும் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கும் சிங்கப்பூர் உதவி வழங்க முடியும் எனக் கூறியுள்ளார். பாலித்தீவில் இந்தோனேசிய சனாதிபதி மேகவதியுடன் பேச்சுவார்த்தை நடத்திய பின்னர் இருவரும் செய்தியாளர் மாநாடு ஒன்றினில் உரை நிகழ்த்தியுள்ளனர். இதனைத் தொடர்ந்து அவுஸ்திரேலியாவிற்கும் புஷ் சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.





அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் அவுஸ்திரேலியப் பாராளுமன்றத்தில் உரையாற்று வதையும் கன்பராவிலுள்ள அவுஸ். பாராளுமன்றத்திலிருந்து அமெரிக்கத் தூதரகம் நோக்கி இவரது வருகைக்கு ஆட்சேபம் தெரிவித்து ஆயிரக் கணக்கானோர் பேரணியாகச் செல்வதையும் மேலுள்ள படங்களில்

# தொய்வு நோயைத் தடுக்கும் செங்கண்மாரி!

ஹெப்படைட்டீஸ் "ஏ" எனப்படும் செங்கண்மாரி நோய் கண்டவர்கள் தொய்வு நோயிலிருந்து பாதுகாக்கப்படுவதாக பிரிட்டனில் வெளியாகும் "நேச்சர்" சஞ்சிகை தெரிவிக்கின்றது.

அபிவிருத்தி அடைந்த நாடுகளில் இவ்வகை செங்கண் மாரி வைரஸ் கிருமிகள் கட்டுப்பாட்டுக்குள் வந்திருப்பதால் அங்கு தொய்வு நோயாளர்களின் தொகை படிப்படியாக அதிகரித்திருப்பது கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. தொய்வு நோயை ஏற்படுத்துகின்ற கிருமியை அழிக்கும் சக்தி செங்கண்மாரி (ஹெப்படைட்டீஸ் ஏ) கிருமிகளிடம் காணப்படுவதாகவும் இவை நுரையீரல் செயற்பாட்டைக் கட்டுப்படுத்துவதாகவும் தெரியவருகின்றது.

A வகை செங்கண்மாரி கிருமிகளின் அச்சுறுத்தல் மோசமாகியிருந்தது. எனினும் இன்று அது 30 வீதத்திலிருந்து 25 வீதம் வரை குறைந்துள்ளமை காணக்கூடியதாகவுள்ளது. ஆயினும் இந்நிலை தொய்வு நோயாளர்களின் எண்ணிக்கையை அதிகரித்துள்ளதாகவும் தெரியவருகிறது.

ஐக்கிய அமெரிக்காவில் மட்டும் 17.3 மில்லியன் மக்கள் தொய்வு நோயினால் அவதியுறுவதாகவும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுவோரும், இறப்போரும் 75 வீதம் எனவும் கூறப்படுகிறது.

கலிபோனியாவில் ஸ்டென்போட் பல்கலைக்கழகத்தில் எலிகள் மூலம் செய்யப்பட்ட ஆய்வுகளின் மூலம் இவ் வைரசுகள் பரவுவதற்கு சுத்தமின்மை காரணமாகலாம். இவ்வகை வைரசுகளில் A,B என இருவகைகள் காணப்படுகின்றன. B என்ற வைரஸ் ரகம் மனிதருக்கு மிக ஆபத்தை விளைவிக்கக்கூடியவை. A வைரஸ் காணப்படும் நபரில் நோய் அறிகுறி காணப்படுவது குறைவாகும். இதனால் இவர்களை இனம் காண்பதும் கடினமாகும்.

செல்வந்த நாடுகளில் பண்டைய காலத்தில் A வகை ஹெப்படைட்டீஸ் வைரசு சுலபமாக பரவியிருப்பினும் தனியார் வைத்தியசாலைகளினாலும் ஆரோக்கிய பாதுகாப்புப் பிரிவினராலும் கட்டுப்படுத்தப்பட்டமை பெரும் நன்மையளிப்பதாகும்.


1970 களில் மேற்குலக நாடுகளில் ஹெப்படைட்டீஸ் A வைரஸ் கிருமிகள் தொய்வு நோய் எதிர்ப்பு சக்தியைக் கொண்டிருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது. இது தொடர்பாக மேலும் விரிவான ஆய்வுகள் நடத்தப்படவிருக்கின்றன.

இதற்கிடையில் வாகனங்களில் இருந்து வெளிவரும் புகையினாலும் தொய்வு நோய் பரவுவதாகத் தெரியவருகிறது.

இதிலிருந்து பாதுகாக்க நீச்சல் பயிற்சிகளை மேற்கொள்வது சிறந்தது என மேற்படி ஆய்வு தெரிவிக்கின்றது. அதற்காக தமது வீட்டு வளவுக்குள் சிறு தடாகங்களை அமைத்துக் கொள்ளுமாறும் அவ்வாய்வு நிறுவனம் ஆலோசனை கூறியுள்ளது.

# அறிந்து கொள்ளுங்கள்

மரக்கறி உணவு உண்போர், வெளிவரும் தகவல்களின்படி புற்றுநோய், இதயநோய்,



சிறுநீரகக் கோளாறு, கொலஸ்ரோல் அதிகரித்தல் போன்ற நோய்களில் இருந்து பாதுகாக்கப்படுகின்றனர் எனத் தெரியவருகிறது.

ஆகவே மரக்கறி உணவு உண்போர் அவர்களுக்குத் தேவையான கல்சியம் உயிர்ச்சத்து C, இரும்புச்சத்து போன்ற போசனைகள் சைவ உணவில் காணப்படுவதை உறுதி செய்து கொள்ளுதல் வேண்டும்.

* இரும்புச்சத்து - பசளிக்கீரை, கடும் பச்சை இலைக்கறி, பச்சை அவரை ஆகியவற்றில் காணப்படுகின்றது.

உயிர்ச்சத்து C - பப்பாசிப்பழம், கொய்யாப்பழம், வத்தகப்பழம், தக்காளி, மாம்பழம்.

கல்சியம் - வித்துக்கள். பச்சையிலைகள், பால், பாலாடைக்கட்டி.

புரதம் - பருப்பு, சோயா, முந்திரி விதை.

மாப்பொருள் - கோதுமை, சோளம், அரிசி.

உயிர்ச்சத்து A - கரட், உருளைக்கிழங்கு.

உயிர்ச்சத்து B - மரக்கறிகள், வித்துக்கள் என்பவற்றில் காணப்படுவதால் அசைவ உணவுகளில் மட்டுமே நமக்கு மேற்படி போசனைகள் கிடைக்கின்றன என்ற எண்ணத்தை அகற்ற வேண்டும் என ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

# படம்பிடிக்கும் தொலைபேசி




நிகழ்ச்சிகளை வீடியோப்படம் பிடித்து இன்னோரிடத்திற்கு தொலைத்தொடர்பு சேவையூடாக அனுப்பக்கூடிய கையடக்கத் தொலைபேசிகளை சொனி எறிக்சன் நிறுவனம் தயாரித்து விற்பனைக்கு விட்டுள்ளது. சுவீடன்-ஜப்பான் கையடக்கத் தொலைபேசிகளைத் தயாரித்து வெளியிடும் நிறுவனத்தால் இரண்டு புதிய வகைகள் இவ்வாரம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. நிழற்திரை-படப்பிடிப்புக் கருவி-தொலைபேசியை ஒருங்கமைத்து தயாரிக்கப்பட்டுள்ள டிஜிட்டல் தனிநபர் பாவனைச் சாதனமாகிய இதன் மூலம் குறித்தளவு நேரத்திற்கு நிகழ்வுகளைப் படம் பிடித்து உடனடியாகவே தொலைத்தொடர்பு சேவையூடாக அனுப்பக்கூடிய வசதிகளைக் கொண்டுள்ளது.

# புதிய பறவை



அண்மையில் வெனின்சுலாவில் கண்டுபிடிக்கப்பட்ட புதிய இனக்குருவி இது. இதற்கு கரிசால் செடேற்றர் ஆமோரோஸ் பீஸா கரிசலேன்சிஸ் எனப் பெயரிடப்பட்டுள்ளது. கிழக்கு வெனின்சுலா நாட்டிலுள்ள இஸ்லா கரிசால் என்னும் இடத்தில் இவ்வாறான மூன்று சிறிய பறவைகள் மட்டுமே கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. இவ் இனத்தில் மொத்தம் எத்தனை குருவிகள் உள்ளன என்பது இதுவரை அறியப்படவில்லை. நீல நிற சிறிய சுச்சுபாவமுள்ள இப்பறவையின் கண்டுபிடிப்பை இயற்கையியலாளர்கள் நேற்று முன் தினம் கொண்டாடினர்.

# நயகரா நீர்வீழ்ச்சியில் குதித்தவர் வாழ்க்கையைப் புரிந்து கொண்டார்


நயகரா நீர்வீழ்ச்சியின் அருகிலுள்ள ஆழமான பிரதேசத்தில் பாய்ந்து உயிர்தப்பிய அமெரிக்க பிரஜை வாழ்வதில் அர்த்தம் உள்ளதெனக் கூறியுள்ளார்.

படகு, உயிர்காக்கும் உடற்கவசங்கள் என்பனவற்றின் துணை இல்லாது 150 மீற்றர் ஆழத்தில் குதித்து உயிர்தப்பிய ஒரே நபர் என்றபெயர் மெக்சிக்கன் மாநிலத்தைச் சேர்ந்த ஹோப்ஜோன் என்பவருக்கு உரித்தானது.

இவர் முன்பு வாழ்க்கையில் விரக்தி அடைந்தவராகக் காணப்பட்டவர் என்று கூறப்படுகிறது.

# ஓசோன் படலமும் அதன் நன்மைகளும்

நாம் வாழும் பூமி, வளிமண்டலத்தால் சூழப்பட்டது. நாம் வாழும் பூமியும் அதிலுள்ள சமுத்திரங்களில் வாழும் உயிரினங்களும் சூரியனின் ஒளியினாலும் வெப்பத்தினாலுமே சிறந்த பயனைப் பெறுகின்றன என்பதை அறிவோம். ஆனால் பல் வகைப்பட்ட கதிரியக்கங்களைக் கொண்ட சூரியனின் ஒளி நேரடியாக நம்மை நோக்கி ஊடுருவுமாயின் எம்மால் அதாவது எந்த உயிரினங்களாலும் தாங்கிக்கொள்ள முடியாது.



ஓசோன் ஓட்டை

ஆகவே இதிலிருந்து எம்மைப் பாதுகாப்பதற்கு ஒருகவசம் இருக்கிறது. அதுவே ஓசோன் படலம். இப் படலமானது புவியின் வாயு மண்டலத்தை மூடிய ஒரு படலமாகக் காணப்படுகிறது. இதனாலேயே புவியிலும் சமுத்திரங்களிலும் உயிர்வாழ்க்கை சாதகமாகிறது.

எனினும் புவியில் வாழும் வேறு எந்த உயிரினங்களையும் விட மதிப்பை பெற்றவனும் புத்திசாதுரியங்களால் சிறப்புப் பெறுபவனுமான மனிதனால் மேற்கூறிய ஓசோன் படைக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.

இது எவ்வாறான ஆபத்து எனில் சூரியக்கதிர்கள் புவியைத் தாக்கக்கூடியவாறு ஓசோன் படலத்தில் ஏற்பட்டிருக்கும் ஓட்டை ஆகும். இது பெரும் ஆபத்துக்குரியது.

நாம் ஒட்சிசன் பற்றி கேள்விப்பட்டுள்ளோம். இவ்வொட்சிசனானது இரு மூல அணுக்களின் சேர்வையாகும். இவ் வொட்சிசன் அணுவோடு மேலும் ஓர் மூல அணு சேரும்போதே ஓசோன் வாயு அணு உருவாகிறது. இதன் காரணமாக ஓசோன் அணு இரசாயன ரீதியாக $O_3$ என கொள்ளப்படுகிறது. ஓசோன் வாயு உருவாவது ஒட்சிசன் மீது சூரியக்கதிர் விழுவதாலாகும்.

கருநீல நிறத்தைக் கொண்ட ஓசோன் படை 1840ஆம் ஆண்டில் ஜேர்மனிய விஞ்ஞானியான கிறிஸ்டியன் பெட்றிக் முக்பின் என்பவரால் கண்டுபிடிக் கப்பட்டது.

இது உயிரினங்களின் சுவாசத் தொகுதியைப் பாதிக்கும். எனினும் புவியின் மட்டத்தில் ஓசோன் படலத்தினால் வெப்பம் குறைவதால் உயிரினங்களுக்கு அவ்வாறான தீமைகள் ஏற்படுவதில்லை. பல் வேறு இரசாயனத் தாக்கங்களினால் ஓசோன் படலத்திற்கு ஆபத்து ஏற்படுவதாக விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். அதன் மூல காரணமாக குளோரோ புளோரோ காபன்கள் இனங் காணப்பட்டன. வாயு மண்டலத்தில் காணப்படும் இவை 10 மடங்குகள் காணப்படுகின்றன.

1992ஆம் ஆண்டு வட, தென் முனை வான் பகுதிகளில் பாரிய ஓசோன் வெடிப்பு இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. அதற்கு முன்னர் ஓசோன் படையின் 60 வீதமானது அழிவுக்குள்ளாகியிருந்தது. விஞ்ஞானிகளின் கண்டுபிடிப்புகளிலிருந்து இது 230 சதுர மைல் பரப்பளவு என கணிப்பிடப்பட்டது. ஓசோன் வாயு 1 வீதம் முதல் 2 வீதம் வரை சிதைவுக்குள்ளாவதன் காரணமாக ஒவ்வொரு ஓசோன் அணுவுக்கேற்ற சூரியக்கதிர் வீச்சு அதிகரிக்கின்றது.


இதனால் மனிதனின் தோற் பகுதியில் புற்றுநோய் ஏற்பட வாய்ப்பாகிறது. கண்ணில் வெள்ளைப்புள்ளி தோன்றும். ஓசோன் படை சிதைவடைவதால் பூமியிலுள்ள விலங்குகள் (மனிதனுள்ளிட்ட) தாவரங்கள் என்பவை பாதிப்படைகின்றன. இதனால் ஓசோன் மண்டலத்தைப் பாதிக்கும் குளோரோ புளோரோ காபனின் பாவனைக்கு கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது. குளிரூட்டிகளில் பாவிக்கப்படும் இந்த வாயுவின் பாவனை மட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது.

இதனாலேயே தற்போது பாவனையிலுள்ள குளிரூட்டிகளில் வெப்ப நீக்கி எனப்படும் குளோரோ புளோரோ காபன் விலக்கப்பட்டுள்ளதால் CFC Free எனும் குறியீடு ஒட்டப்பட்டுள்ளது.

# ஆளுமை, நற்பண்பு, ஆரோக்கியத்தை வளர்க்க உதவும் கராத்தேக் கலை

**இலங்கையின் கராத்தே தந்தையும் எட்டாவது கறுப்புப்பட்டி பெற்றவருமான கிராண்ட் மாஸ்ரர் சீகான் பொனி றொபெட்ஸ் அவர்கள் கராத்தேக் கலையின் வளர்ச்சிக்கு ஆற்றிய சேவையையும் பங்களிப்பையும் பாராட்டித் தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் புலி இலச்சினை பொறிக்கப்பட்ட தேசிய விருதினையும் நினைவுப் பரிசினையும் நேற்று முன்தினம் வழங்கிக்கௌரவித்தார்.**

**இவ்வாறு கௌரவிக்கப்பட்ட கிராண்ட் மாஸ்ரர் சீகான பொனி றொபெட்ஸ் அவர்களிடம் கராத்தேக்கலை குறித்துப் பெறப்பட்ட நேர்காணல் இங்கு தரப்பட்டுள்ளது.**



● கராத்தே கலைபற்றி கூறுங்கள்?

கராத்தே என்பது ஒரு புனிதமான கலை இந்தக்கலையை யாராலும் எளிதாகப் பயின்றுவிட முடியாது. இக்கலை ஒரு அற்புதமான கலை. ஒவ்வொரு மனிதனும் இக்கலையைப்பற்றி ஓரளவாவது அறிந்திருக்க வேண்டும்.

கராத்தே கலையில் ஒருவர் சிறந்தவராக வரவேண்டும் என்றால் துணிவு, தந்திரம், பொறுமையுடன் கூடிய வேகம் போன்ற பல்வேறுபட்ட குண இயல்புகளைக் கொண்டிருக்க வேண்டும். அப்படியானவரால் மாத்திரம்தான் கராத்தேயைக் கற்கமுடியும்.

கராத்தேக்கலையின் அத்தனை நுட்பங்களையும் தெரிந்த ஒருவரால் மாத்திரமே சிறந்த கராத்தே வீரனாக வர முடியும். கராத்தே என்பது வெறுமனே சண்டை பிடிப்பது மாத்திரமல்ல இதனைக் கற்பதன் மூலம் எம் மனதின் வலுவை உடலின் உறுதியை உடல் கட்டை சீரான முறையில் வளர்த்துக்கொள்ளலாம். இக்கலையை கல்வி அறிவுமிக்க ஒருவரால்தான் கலை உணர்வுடனும் பக்குவ உணர்வுடனும் கற்க முடியும். கராத்தேக் கலையில்நாம்திறமையாகவரவேண்டு மானால் விடா முயற்சியும் தொடர்ச்சியான பயிற்சியும் நிச்சயமாகத் தேவை.

இந்தக்கலையை ஒவர் சரியான முறையில் கற்கிறாரோ அவர் திறமையானவராகவும் ஆளுமைமிக்கவராகவும் நற்குணங்கள் படைத்தவராகவும் சமூகத்தில் வாழமுடியும். இந்தக்கலையைக் கற்பதனால் எமது உடலின் ஒவ்வொரு உறுப்பு புதுப்பொலிவு பெறுகிறது. இதனால் நாம் சமூகத்தில் ஒரு ஆரோக்கியமானவராக வாழலாம்.

● கராத்தேக்கலையை கற்கவேண்டும் என்ற எண்ணம் உங்களுக்கு எவ்வாறு ஏற்பட்டது?

நான் ஒரு சிறந்த விளையாட்டு வீரன். சிறுவயதில் இருந்தே நான் விளையாட்டுத் துறையில் ஆர்வம் கொண்டிருந்தேன். அதனால் அனைத்து விளையாட்டுக்களிலும் அதாவது உயரம்பாய்தல், நீளம் பாய்தல், குறுந்தூர நீண்ட தூர ஓட்டம், உதை பந்து, கிரிக்கெட்,கரப்பந்தாட்டம் போன்ற அனைத்து விளையாட்டுக்களிலும் நான் ஆர்வம் கொண்டவன். தினமும் இதற்கான பயிற்சிகளில் ஈடுபடுவேன். இத்தகைய விளையாட்டுக்களில் நான் பங்குபற்றி வெற்றி பெற்று சிறந்த விளையாட்டு வீரன் என்று பரிசும் பெற்றிருந்தேன்.

இப்படி ஏறத்தாள அனைத்து விளையாட்டுக்களிலும் எனக்கு ஆர்வம் இருந்தது. எனது ஆர்வத்தை எவரும் தடுக்கவில்லை. இவ்வாறு விளையாட்டில் ஆர்வம் இருக்கின்ற எனக்கு எனது சிறிய தந்தையார் கராத்தே பற்றி அவ்வப்போது எடுத்துக்கூறுவார். அதனால் எனக்கு கராத்தே பயில வேண்டும் என்ற அவா ஏற்பட்டது. பலரிடம் இது பற்றிக்கேட்டேன். இந்தக் காலப் பகுதியில் நான் கொழும்பு செல்ல வேண்டி ஏற்பட்டது. அங்கு சென்று யூடோ எனும் ஒருவகையான கலையைப் பயின்று அதில் "பிறவுண் பட்டியை" பெற்றேன். அது எனக்கு கடினமாக இருந்தது. அப்போது கராத்தே கற்கக் கூடிய சூழல் ஏற்பட்டது. கராத்தேயைக்கற்றேன். அப்போது மலேசியா செல்லக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டது. நான் அங்கு சென்று ஒரு வருடமாக கராத்தேயைக் கற்றேன். பின்னர் அங்கிருந்து ஜேர்மன்



நாட்டிற்குச் சென்று கராத்தே கற்க எனக்கு ஒரு புலமைப்பரிசில் கிடைத்தது. இந்த புலமைப் பரிசில் மூன்று மாதகாலத்தில் கராத்தே உயர் நுட்பங்களைக் கற்றேன். பின்னர் ஒவ்வொரு வருடமும் அங்கு சென்று கராத்தே பயிற்சி களைப் பெற்று வந்தேன். அங்கு ஜப்பான், சீனா நாட்டு வீரர்களே எமக்கு பயிற்சிகளை வழங்கினர். அது மட்டுமன்றி அங்கு பல பயிற்சிகளை நடத்தினார்கள்.

● கராத்தேக் கலையைப் பயில்வதன் மூலம் ஒருவர் எவ்வாறு தன்னை தற்காத்துக் கொள்கிறார்?

கராத்தேயைக் கற்பிக்கும்போதே அதனுடன் தற்காப்பு பயிற்சியும் வழங்கப்படுகிறது. அதாவது, தற்காப்புக்கு ஏற்றதாகவே கராத்தே கற்பிக்கப்படுகிறது. யாராவது திடீரென பாய்ந்து தாக்கமுற்படும்போது அவர்களது தாக்குதல்களை மிகவும் சுலபமாக தடுத்துக் கொள்ள முடியும். இந்தத் தன்மை என்பது கராத்தேயை நாம் கற்கக் கற்க அது தானாகவே வளர்ந்து கொண்டு வரும். இதனை தனியாக எவரும் கற்க வேண்டிய அவசியம் இல்லை. கற்பிக்கப்பட வேண்டிய அவசியமும் இல்லை. தற்காப்புப் பயிற்சி என்பது கராத்தேயுடன் இணைந்தே உள்ளது. நாம் கராத்தேயை மீண்டும் மீண்டும் செய்து வருவோமானால் தற்காப்பு எம்முடன் ஒன்றித்துவிடும். உதாரணமாக கராத்தேக் கலையை யார் தூய்மையான எண்ணத்துடன் கற்கிறார்களோ அவர்களால் எந்த இக்கட்டான, மோசமான தாக்குதல்களையும் மிகவும் சுலபமாக முறியடித்து தன்னை தற்காத்துக் கொள்ள முடியும்.

● கராத்தேக் கலை ஓர் ஆபத்தான கலை என்ற ஒரு அபிப்பிராயம் மக்கள் மத்தியில் உள்ளதே?

இந்த அபிப்பிராயம் தேவையற்றது. கராத்தேக் கலையில் எவ்வித ஆபத்துக்களும் இல்லை. இதை நாம் வெளியில் இருந்து பார்க்கும்போதுதான் அது பயங்கரமானது என்ற உணர்வை ஏற்படுத்தும். ஆனால், அந்தக் கலையினுள் சென்று பயிற்சிகளைப் பெற்று வந்தால் அந்தக் கலையின் நுட்பங்களைப் பெற்றுக்கொள்ள முடியும். எம்மை ஆபத்தில் இருந்து காப்பாற்றுவதற்காகவே இந்தக் கலை உள்ளது. எனவே, இதைப் பயில்வதன் மூலம் ஆபத்தான நிலையில் இருந்து நாம் எங்களை காத்துக் கொள்ளலாம்.

● கராத்தேக் கலை தற்போது எந்த நிலையில் உள்ளது?

கராத்தேக் கலை தற்போது மிகவும் மோசமான கட்டத்தில் உள்ளது. கராத்தேக் கலையை சரியான முறையில் போதிக்கக் கூடிய தகுதியுடைய ஆசிரியர்கள் இல்லாத நிலையில் வரையறுக்கப்பட்டவர்களைத் தவிர பலராலும் இக்கலை கற்பிக்கப்படுகிறது. இது மாற்றப்பட வேண்டும். இந்நிலை மாற்றப்பட்டு கட்டமைப்பின் கீழ் கராத்தேயைக் கொண்டு வந்தால்தான் இக்கலை உயிர் பெறும்.

கராத்தேக் கலையைப் பாடசாலை ரீதியாக அறிமுகப்படுத்தி ஒரு சரியான நிர்வாகக்கட்டமைப்பின் ஊடாகசரியான முறையில் முன்னெடுத்து ஒழுங்கான பயிற்சிகளை வழங்கி கராத்தேயின் மகிமையை அனைவருக்கும் விளங்க வைக்க வேண்டும். அதனூடாகவே இதை முன்னெடுக்க முடியும்.

கராத்தேக் கலை இன்று இந்நிலையை அடைவதற்கு அனுபவமற்ற ஆசிரியர்களே காரணமாகும். இந்த ஆசிரியர்களிடம் பயிற்சி பெறும் மாணவர்கள் கராத்தேயின் அடிப்படை நிலை தெரியாமலேயே இது தான் கராத்தே என்று வளர்கின்றார்கள். இந்தக் கலையைக் கற்பவர்கள் கலையில் நம்பிக்கை வைக்க வேண்டும். தற்போது இந்தக் கலையை காசுக்கு விற்கின்றனர். இதுவே இந்தக் கலையின் இன்றைய இந்நிலைக்குக் காரணமாகும். இக்கலையை முன்னெடுப்பதற்கு கராத்தே சம்பந்தமான புத்தகங்களை வெளியிட வேண்டும். கராத்தே சம்பந்தமான விளக்கங்களை மாணவர்கள் மத்தியில் ஏற்படுத்தி அதில் ஈடுபாட்டை ஏற்படுத்த வேண்டும். சிறு வயதில் இருந்தே கராத்தேக் கலையில் மாணவர்களுக்கு ஒரு விருப்பை ஏற்படுத்தி அதனூடாக இந்தக் கலையை வளர்க்க வேண்டும்.

● அரசால் வளர்க்கப்படாத நிலையில் தற்போது போர் ஓய்ந்துள்ளது. இந்த குறுகிய கால இடைவெளியில் தமிழீழ விளையாட்டுத் துறையின் இன்றைய இந்த முயற்சி பற்றி நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்?

இவர்களின் முயற்சியால்தான் இந்தக் கலை வளர்க்கப்படும். இல்லையேல் இதை வளர்க்க முடியாது. தமிழீழ விளையாட்டுத் துறையால் இந்தக் கலை சரியான முறையில் வளர்க்கப்படும் என நான் உறுதியாக நம்புகிறேன்.

இந்தக்கலை தமிழீழத்தில் தான் ஒரு சிறப்பான நிறைவை காணும் என்று நான் நினைக்கின்றேன்.

● நீங்கள் கராத்தேக் கலையை வளர்ப்பதற்கு அரும்பணியாற்றியமைக்காக தமிழீழத் தேசியத்தலைவர் அவர்கள் உங்களை கௌரவித்திருக்கிறார். இது உங்கள் மனதில் எந்த உணர்வை ஏற்படுத்தியுள்ளது?

தமிழீழத் தேசியத்தலைவர் அவர்கள் என்னை கௌரவித்திருக்கின்றமை மிகவும் மகிழ்ச்சியான விடயம். நான் இந்தக் கலையைப் பயின்றமைக்காகவும் இந்தக் கலையைச் சிறப்பாக வளர்த்தமைக்காகவும் நான் இதுவரை பெற்ற நூற்றுக்கணக்கான விருதுகளையும் பதக்கங்களையும் விட மிகவும் உயரியதான கௌரவப் பரிசாக நான் இதனைக் கருதுகிறேன். என் வாழ்வில் இதுவரை கிடைத்த கௌரவிப்புக்களைவிட இப்போது தான் நான் இந்தக்கலையைக்கட்டி வளர்த்தமைக்கான ஒரு உயரிய கௌரவம் கிடைத்துள்ளது. நான் தமிழீழத்திலேயே வாழ்ந்து இங்குள்ள மாணவர்களுக்கு கராத்தேக் கலையைக் கற்பித்திருந்திருந்தால் இன்று எனக்குக் கிடைத்த கௌரவம் இன்னும் பெருமதியாக இருந்திருக்கும் என நினைக்கிறேன். விடுதலைப்புலிகள் தமிழீழப் பகுதிகளில் கராத்தேக் கலையைவளர்ப்பதற்கு மிகவும் பாடுபடுகிறார்கள். இந்தக்கலையை அவர்கள் விரும்பு



கிறார்கள். தேசியத்தலைவர் எம்மை கௌரவித்தமை அவர் கராத்தேக் கலையின் மீது வைத்திருக்கின்ற ஆர்வத்தைக்காட்டுகிறது.

**நேர்காணல் - அ. லோகீசன்**

---

# மீண்டும் ஒரு யுத்தத்தை உருவாக்கும் வகையில் யாழ்.இல் படையினர் செயற்படுகின்றனர்

### தமிழ்க் கூட்டமைப்பு பா.உ. மாவை சேனாதிராஜா

தமிழ் மக்கள் யுத்தத்தைவிட்டு அமைதியை விரும்புகின்ற வேளையிலே எம்மை மீண்டும் ஓர் யுத்தத்தை உருவாக்கும் விதத்தில் படையினர் யாழ்மாவட்டத்தில்செயற்படுவதாக யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு உறுப்பினருமான மாவை சேனாதிராஜா குற்றம் சாட்டியுள்ளார்.

தமிழர்களின் கையில் ஆயுதம் இல்லாத வேளைகளில் இராணுவ வாகன விபத்துக்கள், சோதனைக் கெடுபிடிகள், அதியுயர் பாதுகாப்பு வலயங்கள் என்பனவற்றின் செயற்பாட்டினால் மக்களை சீண்டி அவர்களை குழப்பத்திற்கு உள்ளாக்கி பழிதீர்க்கும் படையினர் மீண்டும் ஓர் யுத்தத்திற்கு அழைக்கும் முகமாகவே செயற்பட்டு வருகின்றனர். இச்செயற்பாடுகள் உடனடியாக நிறுத்தப்படவேண்டுமெனவும், இவ்வாறு தொடரப்படுமாயின் அதனை எதிர்த்து வெகுசனப் போராட்டங்களில் ஈடுபடுவதற்கு யாழ். சமூகம் தயாராக இருக்க வேண்டுமென அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

(33)

---

புலிகள்- அரசு பேச்சுக்கள் குறித்து ஆராய

# நோர்வே விசேட தூதுவர் சூல்ஹெய்ம் அடுத்த மாதம் வருகிறார்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் அரசாங்கத்திற்கும் இடையிலான நேரடிப் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ள நோர்வேயின் சமாதான தூதுவர் எரிக் சூல் ஹெய்ம் அடுத்த மாதம் இலங்கை வரவுள்ளதாக நோர்வேத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இதன்போது இரு தரப்புக்களுக்குமிடையிலான பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கான முதற்படிகளை மேற்கொள்வதற்கென தூதரகப் பேச்சாளர் தெரிவித்தார்.

இருதரப்பிற்கும் இடையிலான பேச்சுவார்த்தைக்குரிய இடத்தையும் திகதியையும் குறிப்பதே இவரின் வருகையின் பிரதான நோக்கம் என பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

# புதிய வைத்திய அதிகாரிகள் நியமனத்தில் தமிழர் தாயகப் பகுதி புறக்கணிப்பு

**புதிய வைத்திய அதிகாரிகளை நியமிக்கும் விடயத்தில் தமிழர் தாயகப் பகுதிகள் புறக்கணிக்கப்பட்டுள்ளதாக தமிழீழ சுகாதார சேவையினர் தெரிவிக்கின்றனர். வடக்கு-கிழக்கில் அனேகமான வைத்தியசாலைகளில் வைத்தியர்கள் பற்றாக்குறையிருப்பது தெரிந்தும் இப்பகுதி வைத்திய அதிகாரிகள் வெற்றிடங்கள் குறித்து சரிவரக் குறிப்பிடப்படாது புறக்கணிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.**

சிறிலங்கா சுகாதார அமைச்சின் 18-07-2003 திகதியிடப்பட்ட அறிவிப்பின் படி 140 புதிய வைத்திய அதிகாரிகளை வெற்றிடங்கள் உள்ள வைத்தியசாலைகளுக்கு நியமிக்க ஒழுங்கு செய்துள்ளதாக அறிவித்துள்ளனர். அந்நியமன விபரத்தில் தமிழ் வைத்தியர்களும் உள்ளனர். ஆனால், வடக்கு-கிழக்குப் பகுதிகளில் உள்ள அனேகமான வைத்தியசாலைகளில் உண்மையில் வைத்தியர்களுக்கு மிகவும் பற்றாக்குறை இருப்பதை தெரிந்திருந்தும் புதிய வைத்திய நியமனங்கள் வழங்கும் விடயத்தில் வடக்கு-கிழக்கு பகுதிகளில் வைத்திய அதிகாரிகள் வெற்றிடங்கள் சரியாக குறிப்பிடப்படாது திட்டமிட்டு புறக்கணிப்புச் செய்துள்ளதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. வடக்கு-கிழக்கில் கிளிநொச்சி, முல்லைத்தீவு யாழ்ப்பாணம் மாவட்டங்களில் 80 வீதத்திற்கும் அதிகமாகவும், மன்னார், மட்டக்களப்பு மாவட்டங்களில் 65 வீதத்திற்கு அதிகமாகவும், வவுனியா மாவட்டத்தில் 40 வீதத்திற்கு அதிகமாகவும் வைத்திய அதிகாரிகள் பற்றாக்குறை இருக்கின்றது. ஆனால், இப்படியான நிலைமை களைத் தெரிந்திருந்தும், கண்டிருந்தும் புறக்கணித்து வெற்றிடங்கள் அறிவித்துள்ள விபரத்தில் வடக்கு-கிழக்குப் பகுதிகளில் ஆதார வைத்தியசாலை கல்முனையில் 01 வெற்றிடமும், மாவட்ட வைத்தியசாலை அக்கரைப்பற்றில் 02 வெற்றிடமும், ஆதார வைத்தியசாலை மன்னாரில் 07 வெற்றிடமும், சுற்றியல்கூறு புல்மோட்டையில் 01 வெற்றிடமும், இப்பகுதிகளைத் தான் வெற்றிடங்கள் உள்ளதாக விளம்பரப்படுத்தியுள்ளது சுகாதார அமைச்சு.

எனவே, வைத்திய அதிகாரிகள் உண்மையில் இல்லாத தமிழர் பகுதிகளில் வெற்றிடங்கள் இருக்கின்றன என்பதை விளம்பரப்படுத்தப்படாததால் தமிழ் வைத்திய அதிகாரிகள் இங்கு வந்து சேவையாற்ற விருப்பம் இருந்தும் விண்ணப்பிக்க முடியாத நிலையை சிறிலங்கா அரசின் சுகாதார அமைச்சு செய்திருக்கின்றது. இது சமாதான சூழல் நிலவுகின்ற இவ்வேளையில் தமிழ் மக்களுக்கும், புதிதாக உருவாகின்ற வைத்திய அதிகாரிகளுக்கும், இப்பகுதிகளில் நீண்ட காலமாக பெரும் சிரமத்தை அனுபவித்து தொடர்ந்தும் பணியாற்றுகின்ற வைத்தியர்களுக்கும் மிகுந்த மன வேதனையையும், ஏமாற்றத்தையும் கொடுத்திருக்கின்றது. இதற்கு முன் நியமனங்கள் வழங்கிய போதும் இதே நிலைதான் இருந்தது. அதையும் தெரியப்படுத்தியிருந்தோம். எனவே இப்படியான நியமனங்கள் வழங்கும் வேளை மனிதாபிமானமாக நடந்து கொள்ள வேண்டியது அவசியமாகும் என தமிழீழ சுகாதார சேவையினர் தெரியப்படுத்தியுள்ளனர்.

## பாம்பின் வாலை பிடித்து இழுத்த குழந்தை பாம்பு கடித்து மரணம்

புற்றுக்குள் சென்ற பாம்பினை வாலில் பிடித்து அதை வெளியே இழுக்க முற்பட்டபோது அதுகடித்ததில் நான்கு வயதுச் சிறுவன் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் நண்பகல் வேளை பொன்நகர் திருமுறிகண்டிப் பகுதியில் நடைபெற்றுள்ளது. இதன்போது சுவேந்திரகுமார் விஜே என்ற நான்கு வயது சிறுவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார். வாலில் பிடித்து பாம்பை வெளியே இழுத்தபோது கோபம் கொண்ட பாம்பு சிறுவனைக் கொத்தியது. இதன்போது பாம்புக் கடிக்கிலக்கான இச்சிறுவனை கிளி. மாவட்ட மருத்துவமனைக்கு எடுத்து வந்தபோது அங்கு சிகிச்சைகள் எதுவும் பயனளிக்காத நிலையில் பிற்பகல் வேளை பரிதாபகரமாக உயிரிழந்தார். (லோ)

## கிணற்றில் இறங்கிக் குளித்தவர் நீரில் மூழ்கி மரணம்

பாண்டியன்குளம் பிரதேசத்தில் கிணற்றில் இறங்கிக் குளித்த வேளையில் நீரில் மூழ்கி ஒருவர் மரணமடைந்துள்ளார். மேற்படி சம்பவத்தில் குஞ்சுக்குளம் நவ்வியைச் சேர்ந்த சுப்பிரமணியம் பாஸ்கரன் (வயது-32)என்பவரே மரணமடைந்தவராவார்.

பாண்டியன்குளத்தில் தனது உறவினர் வீட்டில் உள்ள பழுதடைந்த கிணறு ஒன்றில் இறங்கிக் குளித்தபோது அவர் கிணற்றில் மூழ்கி மரணமடைந்துள்ளார்.

துணுக்காய் காவல் பணிமனையினிடம் சம்பவம் குறித்து முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து அவர்கள் மேற்கொண்ட விசாரணையின் போது நபர் மது போதையிலேயே கிணற்று நீரில் மூழ்கி மரணமானதாகத் தெரியவந்தது. (24)

## லெப். கேணல் சேகர் நினைவாக களமுனையில் சிறப்பு நிகழ்வு

சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் சிறப்புத் தளபதியாக இருந்து வீரச்சாவடைந்த லெப். கேணல் சேகர் அவர்களின் மூன்றாம் ஆண்டு நினைவு நிகழ்வுகள் நாகர்கோயில் களமுனைப் பகுதியிலுள்ள மேஜர் கிண்ணி ஞாபகார்த்த நினைவுக் கலையரங்கில் வெகுசிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்வு நேற்று முன்தினம் மாலை 3.00 மணிக்கு இடம்பெற்றது. இந்நிகழ்வின் முதல் நிகழ்வாக பொதுச்சுடரினை பளைப் பிரதேச நிர்வாகப் பொறுப்பாளர் மகேசும், தமிழீழத் தேசியக் கொடியினை பளைப் பிரதேச கட்டளைத் தளபதி லெப். கேணல் முகுந்தனும், திருவுருவப்படத்திற்கான ஈகச்சுடரினை ரவியும் ஏற்றி வைத்தனர். தொடர்ந்து மலர் வணக்கத்தினை சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியைச் சேர்ந்த தாக்குதல் தளபதி பிரதாபன் ஆரம்பித்து வைக்க, போராளிகளால் மலர் வணக்கம் செலுத்தப்பட்டது.

இதனையடுத்து லெப். கேணல் சேகர் ஞாபகார்த்தமாக மென்பந்து விளையாட்டுப் போட்டி நடைபெற்றது. இதில் சங்கிலியன், பண்டாரவன்னியன், குளக்கோட்டன் ஆகிய இல்லங்கள் முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்றன. இதனைத் தொடர்ந்து மாலை கலை நிகழ்வுகள் போராளி உசாந்தன் தலைமையில் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் வரவேற்புரையினை போராளி குமுதன் நிகழ்த்தினார். நினைவுரையினை லெப். கேணல் நகுலன், வைத்தி ஆகியோர் நிகழ்த்தினர். அதனைத் தொடர்ந்து கலை நிகழ்வு, பரிசளிப்பு நிகழ்வுகள் இடம்பெற்றன.

## யாழ்.குடாநாட்டின் சிவில் நிர்வாகத்தில் இராணுவம் ஈடுபடுவது ஏற்புடையதல்ல

### மனித உரிமை ஆணைக்குழு யாழ். இணைப்பாளர் வலியுறுத்து

(வடமராட்சி)

"யாழ்.மாவட்ட சிவில் நிர்வாக நடவடிக்கைகளில் இராணுவத் தரப்பு தொடர்ந்தும் ஈடுபடுவது ஏற்றுக் கொள்ளக் கூடியது ஒன்றல்ல" எனத் தெரிவித்துள்ளார் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலக இணைப்பாளர் பிறுவன் சந்திரசேகர

பருத்தித்துறை முனைப் பகுதியில் படையினரால் பொதுமக்கள் தாக்கப்பட்டமை மற்றும் மீனவர்களது படகுகள் மூழ்கடிக்கப்பட்டமை தொடர்பாக இடம்பெற்ற கூட்டத்தின் முடிவி லேயே மேற்கண்டவாறு அவர் கருத்துத் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு அண்மையில் அழைக்கப்பட்டிருந்த இராணுவத் தளபதி லயனல் பலகல்லவிடம், இவ்விடயம் தொடர்பாக வலியுறுத்தப்பட்டிருந்ததாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

குறிப்பாக அண்மையில் இடம்பெற்ற இராணுவ வாகன விபத்துக்களையடுத்துப் பொதுமக்கள் தாக்கப்பட்டமை தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவி ராதிகா குமாரசுவாமி இராணுவத் தளபதியுடன் பேச்சுக்களை நடத்தியிருந்தார்.

அப்பேச்சுக்களின் போது குடாநாட்டின் சிவில் நிர்வாக நடவடிக்கைகளில் படைத்தரப்பு ஈடுபடமாட்டாதெனும் உறுதிமொழி வழங்கப்பட்டிருந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை பொதுமக்கள் தாக்கப்பட்டமை மற்றும் படகுகள் மூழ்கடிக்கப்பட்டமை தொடர்பாக மீனவ சங்கப் பிரதிநிதிகளுக்கும் படை உயரதிகாரிகள் மற்றும் பொலிசாருக்குமிடையேயான சந்திப்பொன்றிற்கு மனித உரிமைகள் ஆணைக்குழு நேற்று ஏற்பாடு செய்திருந்தது.

முனை புனித தோம்மையப்பர் தேவாலயத்தில் இடம்பெற்ற இக் கூட்டத்தில் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு பிரதிநிதிகளும் தேவாலய பங்குத்தந்தை சிஇருதயதாஸ் கலந்துகொண்டனர்

பிற்பகல் 1.30 இற்கு ஆரம்பமாகி சுமார் இரண்டு மணி நேரத்திற்கு மேலாக நீடித்த இச் சந்திப்பில் உரிய தீர்வுகள் ஏதும் எட்டப்பட்டிருக்கவில்லை.

அங்கு கலந்துகொண்ட, பருத்தித்துறைப் பகுதியில் நிலைகொண்டுள்ள 52-4 படைப்பிரிவின் அதிகாரியான மேஜர் சம்பக, படையினர் எவரும் பொதுமக்களைக் தாக்கவோ அல்லது படகுகளைச் சேதப்படுத்தவோ இல்லையென வலியுறுத்தினார்.

எனினும் படையினரின் தாக்குதலினால் காயமடைந்தோர் தொடர்பான விபரங்களை மீனவ சங்கப் பிரதிநிதிகள் சமர்ப்பித்ததுடன், தாக்குதலிற்குப் பயன்படுத்திய பொருள்கள் சிலவற்றைக் காண்பித்தனர்.

அதேவேளை அங்கு வருகை தந்திருந்த பருத்தித்துறைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, படைச் சிப்பாய் ஒருவருக்கும் பொதுமகன் ஒருவருக்குமிடையே இடம்பெற்ற சிறு மோதலை, படைத்தரப்புப் பெருப்பித்து விட்டதாகக் குற்றம்சாட்டினார்.

எனினும் பேச்சுக்களின் போது பாதிக்கப்பட்ட பொதுமக்கள் மற்றும் மீன்பிடிப் படகுகளுக்குநஷ்ட ஈட்டினைப் பெற்றுக்கொடுப்பது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட முயற்சி களும் பயனளிக்கவில்லை.

இதையடுத்து தனக்குள்ள அதிகாரத்தின் கீழ் சம்பவம் இடம்பெற்ற பகுதியில் நிலைகொண்டுள்ள இராணுவப் படைப்பிரிவின் அதிகாரியை மேலதிக விசாரணைக்காகமனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்திற்கு இணைப்பதிகாரி பிறுவன் சந்திரசேகர அழைத்துள்ளதாகத் தெரிய வருகிறது. (27)


## கிளி/தொழில்நுட்பக் கல்லூரியின் தேசிய சான்றிதழ்களுக்கான ஆங்கிலக்கற்கை நெறி (என். சி. இ. )க்கு பகுதிநேர விரிவுரையாளர்களுக்கான

## விண்ணப்பம் கோரல்

கிளிநொச்சி தொழில்நுட்பக் கல்லூரிக்கு தேசிய சான்றிதழ்களுக்கான ஆங்கிலக்கற்கை நெறியினை போதிப்பதற்கு விரிவுரையாளர்களிடம் இருந்து விண்ணப்பம் கோரப்படுகிறது.

**கல்வித் தகைமை:**

- அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் / நிறுவனத்தில் பெறப்பட்ட ஆங்கில டிப்ளோமா சான்றிதழ் அல்லது ஆங்கில ஆசிரியர்.
- கற்பித்தலில் 5 வருட அனுபவம் இருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் எதிர்வரும் 31-10-2003ற்கு முன்னர், கிளிநொச்சி தொழில்நுட்பக் கல்லூரி, யாழ். சாலை, கிளிநொச்சி. என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்

அதிபர்,
தொழில்நுட்பக் கல்லூரி,
கிளிநொச்சி.

(சி-8709)


## ஈராக்கிற்காக கண்ணீர்விடும் கட்சிகள் இந்நாட்டு தமிழர் குறித்து சிந்திக்கவில்லை

### பாராளுமன்றத்தில் ரவிராஜ் பா.உ

(கொழும்பு)

ஈராக்கிற்காக கண்ணீர்விடும் பொதுசன ஐக்கிய முன்னணியும், ஜனதா விமுக்தி பெரமுனவும் இந்த நாட்டில் வாழும் தமிழ் மக்கள் குறித்து எதையும் சிந்திக்கவில்லை என்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் என். ரவிராஜ் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஒத்திவைப்பு விவாதத்தில் கலந்துகொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில், குறிப்பாக தீபாவளி பண்டிகையின் போது இவ்விரு கட்சிகளும் ஆர்ப்பாட்டம் நடத்துவதற்குத் தயாராகி இருக்கின்றன. சிறுபான்மை இனத்தின் பண்டிகை நாளில் ஆர்ப்பாட்டம் நடத்த முடிவு செய்திருக்கும் இவ்விரு கட்சிகளும் ஈராக் தேசத்திற்காகக் கண்ணீர் விடுவதில் எந்த அர்த்தமும் கிடையாது என்று கூறினார்.

## பொ.ஐ.மு.விலிருந்து புத்திரசிகாமணி வெளியேற்றம் கூட்டமைப்புடன் பாராளு.வில் செயற்பட முடிவு

பாராளுமன்ற உறுப்பினர் புத்திர சிகாமணி பொதுசன ஐக்கிய முன்னணியிலிருந்து வெளியேறியுள்ளார். நேற்று முன்தினம் மாலை பாராளுமன்றத்தில் உரையாற்றிய புத்திரசிகாமணி தமிழ்த் தேசியக் கூட்டமைப்போடு அவையில் தாம் பங்கேற்கப்போவதாகத் தெரிவித்தார்.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தமிழ் மக்களின் ஆதரவைக் கோருகின்ற அதேவேளையில், அதற்கான எந்த நடவடிக்கைகளையும் அவர் மேற்கொள்ளவில்லை என புத்திர சிகாமணி சுட்டிக்காட்டியுள்ளார்.

தீபாவளிப் பண்டிகையின்போது பல கோரிக்கைகள் முன்வைக்கப்பட்ட போதிலும் தமது ஆர்ப்பாட்டத்தை நடத்துவதென சிறிலங்கா சுதந்திரக் கட்சி எடுத்துள்ள தீர்மானம் தமிழ் மக்களை அவமதிக்கும் ஒன்றாகும் என அவர் தெரிவித்தார்.

இத்தகைய போக்கினை தேசியக் கட்சியொன்று எடுக்கும் வேளையில் 83ஆம் ஆண்டு இடம்பெற்றது போல் கலவரமொன்று இடம்பெறுவதற்கான சாத்தியப்பாடுகள் பற்றி தமிழ் மக்கள் அச்சம் கொண்டுள்ளனர் என்றும் கூறினார்.



### சிந்தனைக்கு

வன்முறையை மென்முறையால் வெற்றி கொள்ள முடியாது என்பதை உணர்ந்து கொண்டதால் தான், நாம் வன்முறைப் போராட்டத்தைத் தழுவிக் கொண்டோம்.

தமிழீழத்தேசியத் தலைவர்.

ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 25-10-2003

## விசாரணையின்றித் தீர்ப்பு!

கண்காணிப்புக்குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் ரெலவ் சனைப் பதவியிலிருந்து திரும்பப் பெறுமாறு - அதாவது திருப்பி அழைக்குமாறு சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நோர்வேப் பிரதமரைக் கோரியுள்ளார். அண்மையில் சர்வதேசக் கடற்பரப்பில் வைத்துக் கடற்படை, புலிகளின் கப்பல் என அடையாளம் கண்ட கப்பல் ஒன்று தப்பித்துச் செல்வதற்குக் கண்காணிப்புக் குழுவின் நடவடிக்கைகள் காரணமாக இருந்ததென்பதே தற்பொழுது மேஜர் ஜெனரல் ரெலவ்சனைத் திருப்ப அழைக்குமாறு சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விடுத்த கோரிக்கைக்குக் காரணமாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் குற்றச்சாட்டு விடுதலைப்புலிகளின் ஆயுதக் கப்பல் ஒன்று கண்காணிப்புக்குழு வழங்கிய தகவலை அடுத்துத் தப்பிச் சென்றுவிட்டது என்பதாகும். இதற்குப் புலிகளின் கப்பலை வழிமறிக்கச் சென்ற கடற்படையின் பீரங்கிக் கப்பலில் இருந்த கண்காணிப்புக்குழு உறுப்பினர்கள் செய்மதித் தொலை பேசி மூலம் இத்தகவலைக் கண்காணிப்புக் குழுவின் தலைமைக்கோ அன்றிப் புலிகளுக்கோ அறியத் தந்துள்ளமையே காரணம் என்பதாகவுள்ளது.

ஆனால், இவ்விவகாரம் தொடர்பாகக் கண்காணிப்புக்குழு எந்தவிதமான கருத்துக்களையும் வெளியிடாத நிலையில், ஆயுதக்கப்பல் விவகாரத்தில் கண்காணிப்புக்குழு எவ்வாறு நடந்து கொண்டது. சனாதிபதியின் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக தமது நிலைப்பாடு என்பன குறித்து எதுவுமே தெரியவில்லை. ஆகையினால், சனாதிபதியின் குற்றச்சாட்டுக்கள் குறித்து உண்மை நிலவரம் எதுவும் அறிய முடியாத நிலையே உள்ளது.

இவைதவிர, சர்வதேசக் கடற்பரப்பில் சென்று கொண்டிருந்தது விடுதலைப்புலிகளின் கப்பல் தானா? அவை ஆயுதங்களை ஏற்றிக் கொண்டுவந்தவைதானா? என்பவை கேள்விக்குள்ளானவையாகவே இருக்கையில், சிறிலங்காக் கடற்படையின் கண்காணிப்பிற்கு உட்பட்ட பின்னர் கப்பல் எவ்வாறு தப்பிச் சென்றிருக்க முடியும்? அது மட்டுமல்லாது, புலிகளின் சரக்குக் கப்பல் சிறிலங்காக் கடற்படையின் அதிவேக ரோந்துப் பீரங்கிக் கப்பல்களிடம் இருந்து எவ்வாறு தப்பிச் சென்றிருக்க முடியும்?

இது மட்டுமல்லாது, சிறிலங்காக் கடற்படைக்குப் புலிகளின் கப்பல்கள் தொடர்பான தகவல்கள் அன்றி சந்தேகத்திற்குரிய கப்பல்களின் நடமாட்டம் குறித்துத் தகவல்களை வழங்கும் இந்திய கடற்படையின் கண்களில் எவ்வாறு இக்கப்பல் மண்ணைத் தூவிவிட்டுத் தப்பிச் செல்வது சாத்தியமாகி இருக்கும்.

இவை யாவற்றிற்கும் அப்பால், கப்பல் தப்பிச் செல்வதற்குக் கண்காணிப்புக் குழு வழங்கிய தகவல்களே காரணம் என்பது கூட உறுதி செய்யப்பட்டதோ அன்றி விசாரணையின் பின்னரான தகவல்களோ அல்ல. சிறிலங்காக் கடற்படை கண்காணிப்புக்குழு மீது சுமத்திய குற்றச்சாட்டே ஆகும். ஆகையினால், விசாரணைகள் மூலம் உண்மை வெளிப்படும் முன்னர் எவ்வாறு கண்காணிப்புக் குழுத் தலைவரைப் பதவியில் இருந்து விலக்குமாறு கோருதல் பொருத்தப்பாடானதாக/நியாயமானதாக இருக்க முடியும்?

அதாவது, யுத்த நிறுத்த உடன்பாடு கைச்சாத்தானதில் இருந்து முரண்பட்ட நிலைப்பாட்டையே எடுத்துவரும் கடற்படை இவ்வாறானதொரு குற்றச்சாட்டின் மூலம், கண்காணிப்புக் குழுத் தலைவரை வெளியேற்ற விரும்பியிருக்க மாட்டாது என எவ்வாறு கூறிவிடமுடியும்? சமாதான முயற்சிகளை முறிவடையச் செய்வதையே நோக்கமாகக் கொண்டு செயற்படும் சனாதிபதி இதனை ஒரு சந்தர்ப்பமாக, வாய்ப்பாக உருவாக்கிக் கொண்டுள்ளார் எனக் கூறின் அது எவ்வாறு தவறாக முடியும்?

இனப்பிரச்சினைத் தீர்விற்கு நோர்வே அரசை ஏற்பாட்டாளராகத் தாமே அழைத்ததாக சனாதிபதி சந்திரிகா கூறிக்கொண்டாலும், நோர்வே அரசு சமாதான முயற்சிகள் தொடர்பாக மேற்கொண்ட முயற்சிகளுக்கு பொ.ஐ. முன்னணியோ, சனாதிபதி சந்திரிகாவோ ஒத்துழைப்பு வழங்கியதாக இல்லை. காலத்திற்குக் காலம் நோர்வே அரசு மீது குற்றச்சாட்டுக்களையும், குறைகளையும் மேற்கொண்டே வந்துள்ளது.

ஆரம்பத்தில்- பொ.ஐ.மு. ஆட்சியில் இருந்தபோதே - சமாதான முயற்சியில் நோர்வேயின் விசேட தூதுவராகக் கடமையாற்றிய எரிக் சூல் ஹெய்மை விலக்கிக் கொள்ளுமாறும், பின்னர் நோர்வேயின் இலங்கைக்கான தூதுவர் ஜோன வெஸ்பேர்க்கை விலக்கிக் கொள்ளுமாறும் கோரிக்கையை சனாதிபதியும், அவரது கட்சியும் விடுத்திருந்தன. இதற்கென இராஜீக ரீதியில் முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. இது மட்டுமல்ல, நோர்வே அரசு பிரதிநிதிகளைப் புறக்கணிக்கும் நடவடிக்கையிலும் சனாதிபதி சந்திரிகா இறங்கியிருந்தார். இறுதியாக நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் இலங்கை வந்திருந்தபோது அவரைச் சந்திப்பதை சனாதிபதி சந்திரிகா தவிர்த்தார்.

இந்நிலையில், கண்காணிப்புக் குழுத் தலைவரைப் பதவியிலிருந்து விலக்குமாறு சனாதிபதி சந்திரிகா கோரிக்கை விடுத்துள்ளமை ஒன்றும் ஆச்சரியத்திற்குரியவை அல்லத்தான். ஆனால், குற்றச்சாட்டு விசாரணைகள் முடியும் முன்னர் இவ்வாறு விலக்கக் கோருவது அநாகரிகமான செயலாகும். அதாவது, பொறுப்பு வாய்ந்த ஒருவர் செய்யும் செயல் அல்ல. ஆனால், பொறுப்பு வாய்ந்ததொரு தலைவராக சனாதிபதி சந்திரிகா எப்பொழுதுமே இருந்ததில்லை என்பதே கடந்த கால வரலாறு. அவரின் பொறுப்பற்ற தனமே இலங்கை பெரும் சீர்கேட்டையும், அழிவையும் சந்திக்கக் காரணமாக இருந்தது என்பதே உண்மையாகும்.

# புலிகளின் ஆலோசனைகள் கிடைத்தவுடன் முஸ்லிம்கள் சார்பில் திருத்தம் முன்வைக்கப்படும்

## பிரதி அமைச்சர் பஸீர்சேவுதாவூத்

வடக்கு கிழக்கு இடைக்கால நிர்வாக நகலை விடுதலைப் புலிகள் சமர்ப்பித்த பின்னரே முஸ்லிம்கள் சார்பான யோசனைகளையும் ஆலோசனைகளையும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் முன்வைக்குமென கட்சியின் தவிசாளரும் பிரதியமைச்சருமான பஸீர் சேவுதாவூத் கூறியுள்ளார்.

இம்மாத இறுதியில் விடுதலைப் புலிகளின் இடைக்கால நிர்வாக யோசனைகள் அரசாங்கத்திடம் கையளிக்கப்படும் என்றும், அவ்வாறு கையளிக்கப்படும் பட்சத்தில் விடுதலைப்புலிகளின் திட்ட நகலினை சனாதிபதியிடமும் முஸ்லிம் காங்கிரஸிடமும் கையளிப்பதற்குப் பிரதமர் ரணில் விக்கிரம சிங்க பூரண சம்மதமளித்துள்ளதாகவும் பிரதியமைச்சர் கூறியுள்ளார்.

ஏறாவூரில் விசேட வைபவமொன்றில் கலந்துகொள்கையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

மேலும் புலிகளின் இடைக்கால நிர்வாக யோசனைகளில் முஸ்லிம்கள் தொடர்பாகக் கூறப்பட்ட விடயங்களைப் பரிசீலித்த பின்னர் அதற்கான மாற்று யோசனைகளை முஸ்லிம் காங்கிரஸ் முன்வைக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் திட்டநகலில் முஸ்லிம்களுக்கான திருத்தங்களை மட்டுமே முஸ்லிம் காங்கிரஸ் முன் வைக்குமே தவிர தமிழ் மக்கள் தொடர்பாகக் கூறப்பட்ட விடயங்கள் பற்றி எந்தவிதமான மாற்றத்தையும் தெரிவிக்கப்போவதில்லை என்று கூறியுள்ளார்.

ஆனால் வடக்கு கிழக்கு மாகாண இடைக்கால சபையில் முஸ்லிம்களை முஸ்லிம்கள் ஆளுகின்ற சுயநிர்ணய உரிமைகளையும் அரசியல் அந்தஸ்தினையும் ஒரு போதும் விட்டுக் கொடுப்பதில்லை என்றும் கூறியுள்ளார்.

# அரச ஊழியர் சம்பளத்தை அதிகரிக்க சனாதிபதி வலியுறுத்து

அரச ஊழியர்கள் நீண்ட காலமாக எதிர்பார்த்து இருக்கும் சம்பள உயர்வினை 2004ற்கான வரவு செலவுத்திட்டத்தில் பெற்றுக்கொடுக்குமாறு சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அமைச்சரவைக்கு மீண்டும் அறிவித்துள்ளார்.

இது தொடர்பான அமைச்சரவைப் பத்திரமொன்றை அமைச்சரவைக்கு சனாதிபதி சமர்ப்பித்துள்ளார் என சனாதிபதிச் செயலகம் கூறியுள்ளது.

அரச ஊழியர்களின் சம்பளம் உடனடியாக 50வீதத்தால் அதிகரிக்கப்பட வேண்டுமென கடந்த யூலை மாதமும் சனாதிபதி அமைச்சரவைக்கு சமர்ப்பித்த பத்திரத்தில் கேட்டுள்ளார்.

ஆனால் அரச ஊழியர்களின் சம்பள உயர்வை உடனடியாக 50 வீதத்தால் அதிகரிக்கும் பிரேரணையை செயற்படுத்த முடியாதிருப்பதாக கடந்த ஆகஸ்ட் மாதம் நிதியமைச்சர் கூறியிருந்தார்.

அத்துடன் இவ்வாறான அதிகரிப்பை வழங்குவதற்கு முன்னர் சம்பள நிர்ணய ஆணைக்குழுவின் சிபாரிசுகளை ஆழமாக ஆராயவேண்டியுள்ளது என்றும் கூறியிருந்தார்.

தற்போது சம்பள நிர்ணய ஆணைக்குழு நீண்ட தாமதத்தின் பின்னர் சிபார்சு செய்துள்ள சம்பள அதிகரிப்பு சம்பந்தமாக உடனடியாக இடைக்கால சம்பள அதிகாப்புத் தொடர்பாக நடவடிக்கை எடுக்குமாறு கூறியுள்ளார்.

# புலிகள் மீண்டும் போர் தொடுக்க மாட்டார்கள்

## இதுவே இந்தியாவின் நிலைப்பாடு என்கிறார் ரணில்

புலிகள் மீண்டும் போர் தொடுக்கமாட்டார்கள் என்பது இந்தியாவின் நிலைப்பாடாகுமென ரணில் கூறியுள்ளார்.

இந்திய உளவு நிறுவனங்களின் தகவல்கள் இதனைத் தெளிவுபடுத்துகின்றன என அந்நாட்டின் பிரதமர் வாஜ்பாய் சுட்டிக் காட்டியதாக அவர் மேலும் கூறியுள்ளார். நேற்று முன்தினம் நடைபெற்ற பூர்வாங்க அமைச்சரவைக் கூட்டத்தில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

## சுயாதீன தொலைக்காட்சி நிறுவனத்திடம்

# 150 மில்லியன் நட்டஈடு கோரி கடற்படை அதிகாரி வழக்கு

தன்னைக்குறித்து அவதூறான செய்தி வெளியிட்டமைக்காக சிறிலங்காவின் சுயாதீன தொலைக்காட்சி நிறுவனம் (ஐ.ரி.என்) 150 மில்லியன் ரூபா நட்டஈடு வழங்க வேண்டும் எனக் கோரி சிறிலங்காக் கடற்படை கிழக்குப் பகுதித் தளபதி றியர் அட்மிரல் வசந்த கர்னாகொட வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

05-10-2003 அன்று ஐ.ரி.என். இல் இடம்பெற்ற "பாதுகாப்புப் பகுதி" கொடுக்கப்பட்ட விடயம் தன்னுடைய தனிப்பட்ட மரியாதையைப் பாதிப்பதாக அமைகிறதென மேற்படி கடற்படை அதிகாரி கூறியுள்ளார். தேசிய பாதுகாப்பு சம்பந்தமாக பிழையான தகவல் கொடுப்பதாகவும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்குத் தான் தகவல் கொடுப்பவரென்றும் தன்மீது குற்றம் கூறப்பட்டுள்ளதாக அவர் கூறினார். தான் ஒரு நம்பத்தகாத மனிதன் எனக் கூறப்பட்டதாகவும் கூறினார். இவ்விடயங்கள் தமக்கு பொறுக்க முடியாத துன்பத்தை அளிப்பதாகவும் அவர் கூறினார்.

# ஆசிய ஆபிரிக்க விளையாட்டுவிழா ஹைதராபாத்தில் நேற்று ஆரம்பம்

முதலாவது ஆசிய, ஆபிரிக்க விளையாட்டு விழா இந்தியாவில் ஹைதராபாத் நகரில் கோலாகலமாக நேற்று ஆரம்பமாகியுள்ளது.


ஆசிய, ஆபிரிக்கக் கண்டங்களைச் சேர்ந்த 97 நாடுகளைச் சேர்ந்த போட்டியாளர்கள் இந்தப் போட்டி நிகழ்ச்சிகளில் பங்குபற்றுகிறார்கள்.

2040 போட்டியாளர்கள் பங்குபற்றும் இந்த விளையாட்டு விழாவில் 1565 அதிகாரிகள் கடமையாற்றவுள்ளார்கள்.

இந்த விழாவுக்கு 208 கோடி ரூபா செலவாகும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த விளையாட்டு விழாவில் 13 இலங்கை வீரர்கள் பங்குபற்றுகின்றார்கள். இதில்11 மெய்வல்லுநர் வீரர்களும் 02 டெனிஸ் வீரர்களும் விளையாடவுள்ளார்கள்.

400 மீற்றர், 4 x 400 மீற்றர் போட்டிகளில் இலங்கை வீரர் சுகத் திலகரட்ண கலந்து கொள்வது குறிப்பிடத்தக்கது.




# பாக். உடன் கிரிக்கெட் இந்திய அரசு இணக்கம்

பாகிஸ்தானுடனான கிரிக்கெட் போட்டிகளில் பங்குபற்ற இந்தியா இணக்கம் தெரிவித்துள்ளது. இதனை சர்வதேச கிரிக்கெட் சம்மேளனம் வரவேற்றுள்ளது.

பாகிஸ்தானுடனான கிரிக்கெட் போட்டிகளில் பங்குபற்ற இந்திய அணிக்கு இந்திய மத்தியரசு அனுமதியளித்துள்ளதாக இந்திய வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்த சிங்ஹா அறிவித்துள்ளார்.

இதனடிப்படையில் ஏற்கனவே திட்டமிட்டிருந்தவாறு இந்தியணி எதிர்வரும் பெப்ரவரி மாதம் பாகிஸ்தானுக்கு விஜயம் செய்யுமென இருநாட்டு அதிகாரிகளும் எதிர்பார்க்கின்றார்கள்.

# ஐ.நா.வுக்கான இல.நிரந்தரப் பிரதிநிதிக்கு கடுமையான தொனியில் சந்திரிகா கடிதம்

சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சிறிலங்காவிற்கான ஐ.நா.வின் நிரந்தரப் பிரதிநிதியான சார்ளி மகேந்திரனுக்குக் கடுமையான வார்த்தைப் பிரயோகங்களுடனான கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

இராஜதந்திரிகளை நியமிக்கும் அதிகாரம் அரசியலமைப்பு ரீதியாக தனக்கே உள்ளது எனக் குறிப்பிட்டுள்ள அவர் சார்ளி மகேந்திரனின் தவறான வழிநடத்தலே தன்னால் அண்மையில் நடைபெற்ற ஐ.நா.கூட்டத்தில் கலந்து கொள்ள முடியாமைக்குக் காரணம் எனக் குற்றம் சுமத்தியுள்ளார்.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கையில், எனக்கு விலாசமிடப்பட்டு அனுப்பப்பட்ட பொதுச் செயலாளரின் அழைப்பிதழ் எப்படி ஆடி மாதம் 23 ஆம் திகதி 2003ம் ஆண்டு பிரதமருக்குக் கிடைத்தது? பிரத மருக்குக் கிடைத்து 8 நாட்களின் பின் அதாவது ஆடி மாதம் 31 ஆம் திகதி எனக்கு அனுப்பப்பட்டது. உம்முடைய தவறினால் தாமதமாகக் கிடைத்தது. அரசாங்கத்தின் தலைவர்களைத்தான் இக்கூட்டத்திற்கு அழைத்திருக்கிறார்கள். இலங்கை அரசாங்கத்தின் தலைவர் யார்? 1994-2001 காலப் பகுதியில் ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைப் பிரதிநிதியாகவிருந்த சார்லி அமரசிங்க அனுப்பிய கடிதத்தில் அரசாங்கத்தின் தலைவர் என விலாசமிடப்பட்டிருந்தது. உம்முடைய கூற்று என்னைப் பிழையாக வழிநடத்தத் திட்டமிட்டிருக்கிறது. அக்கடிதம் பிரதமருக்கு விலாசமிடப்படவில்லை. நீங்கள் ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைப் பிரதிநிதியாக இருப்பதற்குப் பொருத்தமற்ற கண்டிக்கத்தக்கவர் எனத் தீர்மானம் எடுக்க வேண்டியுள்ளது என சனாதிபதி கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

# புத்திரசிகாமணிக்கு எதிராக பொ.ஐ.மு ஒழுங்கு நடவடிக்கை

(கொழும்பு)

அரசாங்கத்துடன் இணைந்து கொண்ட பொதுசன ஐக்கிய முன்னணியின் தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் புத்திரசிகாமணிக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்போவதாக பொ.ஐ.மு.வின் செயலாளர் தி.மு, ஜெயரட்ண தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் பட்சத்தில் அதற்கு முகம் கொடுக்க தான் தயாராக இருப்பதாக புத்திரசிகாமணி தெரிவித்துள்ளார். (32)

# அரசியல் குரோதங்களை ஏற்படுத்தும் சில முஸ்லிம் பிரதிநிதிகள்

## அலிசாஹிர் மௌலானா குற்றச்சாட்டு

தற்போது எமது நாட்டில் மேற்கொள்ளப்பட்டுவரும் சமாதான முயற்சிகள் சர்வதேசத்தின கவனத்தை ஈர்த்துள்ளது. அது மாத்திரமின்றி உலக நாடுகளின் நம்பிக்கையை எமது நாடு பெற்றுள்ளதாகவும் கொள்கை திட்டமிடல் அபிவிருத்தி அமுலாக்கல் அமைச்சின் ஆலோசகர் அலிசா ஹிர் மௌலானா தெரிவித்தார்.

ஏறாவூர் அகமட்பரீட் வித்தியாலயத்திற்கு, வடக்கு-கிழக்கு மாகாண சமூக மீளமைப்பு அபிவிருத்தி திட்டத்தின் கீழ் ஆசிய அபிவிருத்தி வங்கியினால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள முப்பத்தைந்து லட்சம் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ள மாடிக்கட்டிடத்திற்கான அடிக்கல் நாட்டு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார். சமாதானப் பேச்சுவார்த்தைகளின் போது முஸ்லிம் சமூகத்தின் அபிலாசைகள் தொடர்பாகச் சமர்ப்பிக்கப்படும் யோசனைகள் நிராகரிக்கப்பட மாட்டாதென அரசாங்கமும், தமிழீழ விடுதலைப் புலிகளும் தெளிவாகத் தெரிவித்துள்ளனர். அந்த வகையில் நிதானமாகச் செயற்பட வேண்டிய இக்கால கட்டத்தில் எமது முஸ்லிம் பிரதிநிதிகள் அரசியல் ரீதியான குரோதங்களினால் தமக்கிடையே ஒற்றுமையினைத் தொலைத்து விட்டு சர்ச் சையினை ஏற்படுத்துகிறார்கள். இதுசமாதான முயற்சிகளில் முட்டுக் கட்டையாய் அமைந்து விடக்கூடாதென்றும் அலிசா ஹிர் மௌலானா குறிப்பிட்டார்.

# ஒத்துழைப்பு வழங்க முடிவு

இலங்கைப் பொலிஸ் திணைக்களத்தைப் புனரமைக்க இந்தியா முன்வந்துள்ளதாக அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அத்துடன் சிறிலங்காவின் பொலிஸ் படையும் நெருங்கிய ஒத்துழைப்புடன் செயற்பட முடிவு செய்துள்ளதாகவும் தெரிவித்தார்.

# உலர் உணவு நிவாரண பொருட்கள் விநியோகம்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெயர்ந்தோருக்கான யூலை, ஆகஸ்ட் மாதஉலர் உணவு நிவாரணப்பொருட்கள் தற்போது வழங்கப்பட்டு வருகின்றன.

கடந்த 21ஆம் திகதி முதல் வழங்கப்பெற்றுவரும் மேற்படி நிவாரணப்பொருட்கள் நவம்பர் 5ஆம் திகதிவரை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் பெற்றுக்கொள்ளலாமென கரைச்சி பிரதேசசெயலகத்தினர் தெரிவித்துள்ளனர்.

நிவாரணப்பொருட்களை பெறச் செல்லும் பொழுது நிவாரண முத்திரையுடன் உணவுப் பங்கீட்டு அடையினையும் எடுத்துச் செல்லுமாறு கிளி. கரைச்சிப் பிரதேசச் செயலர் பொன். நித்தியானந்தன் வேண்டியுள்ளார். (சோ)

## சத்துணவு வழங்கல்

முல்லைமாவட்டத்தில் உலக உணவுத்திட்டத்தின் கீழ் மாதாந்தம் சத்துணவு வழங்கப்படுகின்றது.

கர்ப்பிணித்தாய்மார்கள், குழந்தைகள் ஆகியோருக்கே மேற்படி சத்துணவு வழங்கப்பட்டு வருகின்றது. சத்துணவு இல்லாதவர்கள் இத்திட்டத்தினால் அதிகூடிய பயன்பெற்றுள்ளனர் என மாகாணசுகாதார சேவைப் பணிப்பாளர் து.வி.ஜெயக்குலராஜா தெரிவித்தார். (20)

### தென்னிந்திய...

னரை விருந்தினர் பாதையூடாக குடாநாட்டிற்குள் அழைத்துவர படையினர் அனுமதிக்கவில்லை.

பொதுமக்களது பாவனைக்கென கைவிடப்பட்ட மக்கள் குடியிருக்களிடையே அமைக்கப்பட்டுள்ள தற்காலிக பாதையூடாகவே குழுவினர் பயணிக்க முடியுமென படைத்தரப்பு வலியுறுத்தியிருந்தது.

எனினும் அங்கு பிரசன்னமாகியிருந்த இந்துக் கலாச்சார அமைச்சர் தி.மகேஸ்வரன், அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பயணிக்கும் விமான நிலையத்திற்கு முன்னால் உள்ள பலாலி வீதியூடாகவே குழுவினரை அழைத்துச் செல்ல முற்பட்டார். இதனையடுத்து படையதிகாரிகளுக்கும் அமைச்சர் தி.மகேஸ்வரனுக்குமிடையே காரசாரமான விவாதங்கள் இடம்பெற்றன. எனினும் படையினர் தமது முடிவை மாற்றிக்கொள்ள மறுத்ததால் தற்காலிக பாதையூடாகவே குழுவினர் யாழ்.நகர் அழைத்து வரப்பட்டனர். (27)

### தற்போதைய...

யமானதாகும். அதனை முன்கொண்டு செல்லும் வேலைத்திட்டத்திற்கு ஒத்துழைப்பை வழங்குவோம். எம்மால் ஆரம்பிக்கப்பட்ட சமாதான முன்னெடுப்பையே இன்றைய அரசாங்கம் முன்னெடுத்துச் செல்கிறது. எனினும் இதில் காணப்படும் சில அபாய நிலைமைகள் தொடர்ப்பில் சுட்டிக்காட்டுவது எமது கடமையாகும் என சனாதிபதி கூறியுள்ளார். தம்மால் 2000ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்ட சமாதானத் தீர்வு யோசனையை அன்று தமிழ் புத்திஜீவிகளும் மக்களும் ஏற்றுக்கொண்டனர். தமிழ் புத்திஜீவிகளின் அந்த ஆதரவு இன்றும்தொடர்ந்தால் தமிழீழ விடுதலைப்புலிகளை இன்று செயலிழக்கச் செய்திருக்கலாம் என்றார். இந்தக்கூட்டத்தில் உரையாற்றிய சனாதிபதியின் வெளிவிவகார ஆலோசகர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவிக்கையில், சமாதான முன்னெடுப்புகள் கொண்டு செல்லப்படுவதை சில நாடுகள் நல்ல மனதுடன் ஏற்றுக்கொண்டு உதவியளிக்க முன்வந்துள்ளன. ஆனால் சில நாடுகள் உள்நோக்கத்தைக் கொண்டு உதவியளிக்க முன்வந்துள்ளன. இதனை மக்கள் புரிந்துகொள்ளவேண்டும். வடகிழக்கிற்கான இடைக்கால நிர்வாகம் இறுதித் தீர்வு யோசனை முன்வைக்கப்பட்ட பின்னரே அமைக்கப்பட வேண்டும் என பொதுசன ஐக்கிய முன்னணி கூறிவருகிறது. ஆனால் அதை இன்றைய அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவில்லை. இன்று அதனையே இந்தியா கூறுகிறது. இந்தியா இதனைக் கூறியபின்னரே அரசாங்கமும் இதனை உணர்ந்திருக்கிறது என்றார். (32)

### சு.க.நடத்திய...

கொண்டனர்.

உடத்தலவின படுகொலை தொடர்பாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள ஜெனரல் அனுருத்தரத்வத்தவும் இதில் கலந்துகொண்டார்.ஊர்வலத்தில் கலந்துகொணடோர் அரசுக்கு எதிராகவும் போர்நிறுத்த ஒப்பந்தத்திற்கு எதிராகவும் சுலோகங்களை ஏந்திக் கோஷமிட்டவாறு சென்றனர். மாற்று அரசாங்கம் ஒன்றை வலியுறுத்தி இந்த ஊர்வலம் ஒழுங்கு செய்யப்பட்டதாக பொ.ஐ.மு பேச்சாளர் சரத் அமுனுகம தெரிவித்தார். சு.க. செயலாளர் மைத்திரிபால சிறிசேன கருத்துக்கூறுகையில் 10 இலட்சம் மக்களை இந்த ஊர்வலத்தில் எதிர்பார்த்ததாகக் கூறினார். எனினும் ஒரு இலட்சம் வரையான மக்களே இதில் பங்கேற்றதாக சுயாதீன செய்திகள் தெரிவித்தன. இந்த ஊர்வலத்தை முன்னிட்டுப் பொலிசாரும் இராணுவத்தினரும் குவிக்கப்பட்டுத் தீவிர கண்காணிப்பில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். (32)

# மாவீரர் வெற்றிக்கிண்ணத்திற்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி

## - பதிவுசெய்யக் கோரிக்கை

மாவீரர் தினத்தை முன்னிட்டு தமிழீழ விளையாட்டுத் துறையின் கிளிநொச்சி மாவட்ட விளையாட்டுத்துறை மாபெரும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி ஒன்று நடாத்தவுள்ளது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களை உள்ளடக்கி நடாத்தப்படவுள்ள மாவீரர் வெற்றிக் கிண்ணத்துக்கான மேற்படி சுற்றுப்போட்டியில் கலந்துகொள்ள விரும்பும் அணிகள் தங்களுக்கான பதிவுகளை எதிர்வரும் 05.11.2003 இற்கு முன்னர் மேற்கொள்ளுமாறு கிளிநொச்சி மாவட்ட விளையாட்டுத்துறை கேட்டுள்ளது. பதிவுகளை முல்லைமாவட்ட அணிகள் முல்லைமாவட்ட அரசியல்துறை செயலகத்திலும், கிளி.மாவட்ட அணிகள் தமிழீழ விளையாட்டுத்துறை செயலகத்திலும் மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

# சிஹல உறுமய ஜே.வி.பியுடன் பேச சூல்ஹெய்ம் தயார்

(கொழும்பு)

இலங்கையின் சமாதான முயற்சியில் நோர்வேயின் ஈடுபாட்டை எதிர்க்கும் சிஹல உறுமய, ஜே.வி.பி உட்பட்ட கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்த தாங்கள் தயாராக இருப்பதாக நோர்வேயின் விசேட தூதுவர் எரிக்சூல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

அவ்வாறு பேச்சுவார்த்தை நடத்த விரும்பின் கொழும்பில் உள்ள நோர்வே தூதுவராலயத்தின் ஊடாக தங்களுக்கு அறிவிக்குமாறும் அவர் கேட்டுள்ளார்.

இதனடிப்படையில் சிஹல உறுமய நோர்வேயுடன் பேச்சுவார்த்தை நடத்த தயாராக இருப்பதாக தெரிவித்துள்ளது. ஜே.வி.பி மறுப்புத்தெரிவித்துள்ளதுடன் எந்தவொரு கட்டத்திலும் எரிக்சூல்ஹெய்முடன் பேச்சுவார்த்தை நடாத்தமாட்டோம் எனவும் தெரிவித்துள்ளது. (32)

# புத்தளம் பகுதியில் கட்சிப் போட்டியில் 6 வீடுகள் தீயிட்டு எரிக்கப்பட்டன

## - ஐ.தே.க., சு.க.பரஸ்பரம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

புத்தளம் ஆராய்ச்சிக்கட்டுவப் பகுதியில் ஆறு வீடுகள் தீயிட்டுக் கொளுத்தப்பட்டுள்ளன.

இது குறித்துத் தெரியவருவதாவது, நேற்று சுதந்திரக்கட்சி நடாத்திய ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்துகொள்ளாதவர்களின் வீடுகளே தீயிடப்பட்டதாகவும், கலந்துகொண்டவர்களின் வீடுகளே தீயிடப்பட்டதாகவும் அரசாங்க கட்சியான ஐ.தே.கட்சியும் எதிர்க்கட்சியான பொ.ஐ.மு.வும் மாறி மாறிக் குற்றம் சாட்டியுள்ளன.

இதனால் இரு வீடுகள் முற்றாக எரிந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை நேற்றுக்காலை பொ.ஐ.முன்னணி உறுப்பினர் ஒருவர் வெட்டுக்காயங்களுக்கு உள்ளாகியுள்ளார். (32)

## டெங்கு பரவுகிறது!

மாத்தறை நகரிலும் அம்மாவட்டத்தின் ஏனைய பகுதிகளிலும் டெங்குக் காய்ச்சல் பரவிவரும் ஆபத்து மீண்டும் ஏற்பட்டுள்ளது. 6 மாதக் குழந்தை உட்பட 62 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. நோய்வாய்ப்பட்டோர்களில் மாணவர் ஒருவரும் பொலிஸ் உத்தியோகத்தர் இருவரும் அடங்குவர்.

### முனைப்....

ளாக்கப் பட்டுள்ளதுடன் சம்பவம் தொடர்பான வாக்குமூலமொன்றையும் அவரிடமிருந்து பொலிஸார் பதிவு செய்துள்ளனர்.

குறித்த இளைஞரால் வழங்கப்பட்ட ஐந்து பக்கங்கள் கொண்ட வாக்குமூலத்தில் ''தனது மீன்பிடி பாஸ் அனுமதியை ஏற்கனவே பறித்து வைத்துள்ள படையினரால் தான் அவற்றை மீள வழங்காது அலைக்கழிக்கப்பட்டமை மற்றும் குறித்த தினத்தன்று தன்னுடன் அழைத்துச் சென்ற சக மீனவரை முதலில் படையினர் தாக்கியமை பற்றியும், சம்பவத்தையடுத்து தன்னைக் கொல்லும் நோக்கில் மேற்கொள்ளப்பட்ட படையினரின் துப்பாக்கிப் பிரயோகம் பற்றியும்'' தெரிவித்துள்ளார்.

இதேவேளை, குறித்த இளைஞன் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டதையடுத்து, மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தின் ஆலோசனைப் பிரகாரம் புனித அந்தோனியார் தேவாலய பங்குத் தந்தை வணபிதா பி.ஜே.அன்ரனிதாஸ் தலைமையில் மீனவ சங்கப் பிரதிநிதிகள் கொண்ட குழுவொன்று பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்திற்குச் சென்று பேச்சுக்களை நடாத்தியது.

இதனையடுத்து சுமார் மூன்று மணி நேரத்திற்கு மேலாகத் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்குள்ளாக்கப்பட்டிருந்த குறித்த இளைஞரைக் குழுவினரிடம் பொலிசார் கையளித்துள்ளனர்.

இதேவேளை, பருத்தித்துறை முனைப் பகுதியில் மீனவர்கள் மற்றும் பொது மக்கள் தாக்கப்பட்டமையைக் கண்டித்து வடமராட்சி கிழக்கு மீனவ சங்கங்களின் ஏற்பாட்டில் கண்டனப் பேரணியொன்று இன்று நடாத்தப்படவுள்ளது.

அசம்பாவிதங்கள் இடம்பெற்ற பருத்தித்துறை முனை புனித தொம்மையப்பர் தேவாலயப் பகுதியில் இருந்து இக்கண்டனப் பேரணி ஆரம்பமாகவுள்ளது. பருத்தித்துறைப் பிரதேச செயலகம் முன்பாக முடிவுறும் கண்டனப் பேரணியின் இறுதியில் கண்டனப் பொதுக் கூட்டமொன்றும் இடம்பெறவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதனிடையே மேற்படி கண்டனப் பொதுக் கூட்டம் மற்றும் பேரணி என்பனவற்றின் போது ஒலிபெருக்கிகளைப் பயன்படுத்தப் பொலிசார் அனுமதி மறுத்துள்ளனர். நிகழ்வு களிற்கு மூன்று நாட்கள் முன்னதாக ஒலிபெருக்கிகளைப் பயன்படுத்துவதற்கான அனுமதியைப் பெற்றிருக்க வேண்டும் எனத் தெரிவித்தே இன்று விடுக்கப்பட்ட அனுமதிக் கோரிக்கையைப் பொலிஸார் நிராகரித்துள்ளனர். (27)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 25ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.